750

உ

பாண்டியர் வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1940
MADRAS

1-40

கும்பகோணம்,
வாணதுறை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்,
T. V. சதாசிவபண்டாரத்தார்
எழுதியது.

3725

ஸ்ரீமஹாபாரத பிரஸ்,
கும்பகோணம்.

All Rights Reserved.

1940.

உ

பாண்டியர் வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1940
MADRAS

954 [1]

கும்பகோணம்,
வாணுதுறை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்,
T. V. சதாசிவபண்டாரத்தார்
எழுதியது.

ஸ்ரீமஹாபாரத பிரஸ்,
கும்பகோணம்.

All Rights Reserved.

1940.

உ

பாண்டியர் வரலாறு.

முதல் அதிகாரம்.

முன்னுரை.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு நிலவும் இங்நிலப்பரப்பு முற்காலத்தே தமிழகம் என்று வழங்கப்பெற்றதென்பது தொன்னூலாராய்ச்சியுடையார் யாவரும் அறிந்ததொன்றாம். இப்போது இதனைத் தமிழ்நாடு என்றே யாவரும் கூறுவாராயினர். இது வடக்கில் வேங்கடமும் தெற்கிற் குமரிமுனையும் கிழக்கிலும் மேற்கிலும் இருபெருங்கடலுமுடையதாயிருக்கின்றது. இத்தமிழகத்தைக் குடபுலம் குணபுலம் தென்புலம் என்ற மூன்று பெரும்பகுதிகளாகப் பிரித்துப் பண்டைக்காலமுதல் ஆட்சிபுரிந்துவந்தோர், சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ் மூவேந்தரேயாவர். இன்னோர் ஆட்சிபுரிந்த பகுதிகள் முறையே சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் எனப்படும். இவற்றுள் பாண்டிமண்டலத்தின் அரசுரிமையுடையராய்ப் பண்டைக்காலத்தே விளக்கமுற்றிருந்த பாண்டிய அரசர்களின் வரலாறே ஈண்டு யாம் ஆராயப்புகுந்தது.

இப்பாண்டியர் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவரும் தொல்குடியினரென்பது அறிஞர்களது கொள்கை. இக்குடியினர் எக்காலத்து இப்பாண்டி மண்டலத்தை ஆட்சிபுரியும் உரிமையெய்தினரென்றாதல், எவ்வேந்தரால் இதன் ஆட்சி முதன்முதலாகக் கைக்கொள்ளப்பட்டதென்றாதல் அறிந்துகொள்ளக் கூடவில்லை. ஆகவே, எவரும் ஆராய்ந்து அளந்து காண்டற்கரிய அத்துணைத் தொன்மையுற்ற குடியினர் இன்னோர் என்பது பெறப்படுகின்றது.

இனி, வடமொழியாளர் ஆதிகாவியமெனக் கொண்டாடும் வான்மீகி ராமாயணத்தில் தமிழ்நாட்டைப்பற்றிய உயரிய செய்திகள் பல காணப்படுதலோடு, பாண்டிவேந்தரது தலைநகர் பொன்னாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பெற்ற கோட்டைவாயிலையுடையதாய் இருந்தது எனவும் சொல்லப்பட்டுளது. அன்றியும், வியாசமுனி

வரது மகாபாரதத்தே, பாண்டவருள் ஒருவனாய அருச்சுனன் ஒரு பாண்டியர் குலப்பெண்மணியை மணந்த செய்தி காணப்படுகின்றது.

இங்ஙனமே வடமொழியிலுள்ள புராணங்களிலும் தமிழரசர்களைப் பற்றிய செய்திகள் காணப்படாமலில்லை. கி. மு. நான்காம் நூற்றாண்டினரெனக் கருதப்படும் காத்தியாயனர், பாணினிவியாகரணத்திற்குத் தாம் வரைந்த வார்த்திகம் என்ற உரையுள் 'பாண்டிய' என்னும் மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். அன்றியும் கிறிஸ்து பிறப்பதன்முன்னர் மகதநாட்டில் ஆட்சிபுரிந்த மௌரிய மன்னனாகிய அசோகனது கல்வெட்டுக்களிலும் பாண்டியர்களைப்பற்றிய செய்தி கூறப்பெற்றுள்ளது. இலங்கையின் பழைய சரித்திரத்தை விளக்கும் 'மகாவம்சம்' என்ற சரிதநூல் அவ்விலங்கையின் முதற்றமிழ்வேந்தனும் புத்தரது நிர்வாணகாலமாகிய கி. மு. 478-ல் அதனை ஆட்சிபுரியும் உரிமையடைந்தவனுமாய விசயனென்பான், ஒரு பாண்டியர்குலப் பெண்மணியை மணந்தனனென்றும், ஆண்டுதோறும் தனது மாமனாகிய பாண்டியற்குச் சிறந்த பரிசில் அனுப்பினனென்றும் கூறுகின்றது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் கிரீஸ் தேயத்தினின்றும் சந்திரகுப்தன் அரசவைக்கு வந்த யவனதூதனாகிய மெகஸ்தனிஸ் என்பான் பாண்டிநாட்டின் வரலாற்றைப் பற்றிக் கூறுவது :—

"ஹெராக்கிளீஸிற்குப் பண்டேயியா என்ற ஒருபெண்பிறந்தது. அவன் அப்பெண்ணிற்குத் தெற்கிற் கடலைச்சார்ந்துள்ள ஒரு நாட்டை அளித்தனன். அவளது ஆட்சிக்குட்பட்டவர்களை முந்நூற்றறுபத்தைந்து ஊர்களில் பகுத்துவைத்து ஒவ்வோர் ஊரினரும் ஒவ்வொரு நாளைக்கு அரசிக்குத் திறைகொணரவேண்டுமென்று கட்டளையிட்டான்" என்பது. இனி கி. பி. 79-ஆம் ஆண்டில் இறந்தவராகிய பிளினி என்ற மற்றொரு மேனாட்டு வரலாற்று ஆசிரியரும் மெகஸ்தனிஸ் கூறியதைப்போன்றுள்ளதோர் கதை கூறியிருக்கின்றார். அஃது, "இந்தியாவிற் பண்டோவென்ற ஓரே சாதி பெண்ணரசுக்கு உட்பட்டது. ஹெராக்கிளீசுக்கு ஓரே பெண்ணிருந்தமையின் அவன் மிக்க அன்புடன் ஒரு பெரியநாட்டை அவளுக்கு அளித்ததாகச் சொல்லுகிறார்கள். அவள் வழியினர் முந்நூறு ஊர்களை ஆட்சிபுரிந்தனர். அன்னோர் பெருஞ்சேனைகளை உடையராயுமிருந்தனர்" என்பது. யவனாசிரியர் இருவரும் கூறியுள்ள கதை, பாண்டியர், மலையத்துவச பாண்டியனது புதல்வியாகிய மீனாட்சியம்மையின் வழித்தோன்றியவராய்க் கௌரியர் என்றழைக்கப்பெற்ற செய்தி

ண்மையாதல், அன்னோர்பாண்டியன் சித்திராங்கதனது மகள் சித்திராங்கதையின் வழித்தோன்றல்களாயுள்ள செய்தியையாதல் குறித்ததாகக் கொள்ளல்வேண்டும். இதுகாறும் யாம் கூறியவாற்றால் பாண்டியர் மிகத்தொன்மை வாய்ந்த குடியினரென்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

இனி, இப்பாண்டியர் சந்திரவம்சத்தைச் சேர்ந்தவரென்றும் வேப்பம் பூமாலையைத் தமக்குரிய அடையாளமாலையாகவும் கயல் மீனுருவத்தைக் கொடியாகவும் இலச்சினையாகவும் கொண்டவர்கள் என்றும் சங்கநூல்களும் பிறநூல்களும் கூறுவதோடு கல்வெட்டுக்களும் குறிக்கின்றன.

இனி, புறநானூறு, பத்துப்பாட்டுமுதலிய சங்கநூல்களில் எத்துணையோபல பாண்டியமன்னர்களது பெயர்கள் காணப்படுகின்றன. ஆயினும் அவர்களது வரலாறு நன்குணரப்படவில்லை. கடைச்சங்க காலத்திற்கு முந்திய நாட்களில் நிலவிய அரசர்களுள் வடிம்பலம்ப நின்ற பாண்டியனும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியுமே சிறந்தோராவர்.

இரண்டாம் அதிகாரம்.

கடைச்சங்ககாலத்திற்கு முந்திய பாண்டியர்கள்.

வடிம்பலம்பநின்ற பாண்டியன் :—இவன் நிலந்தருதிருவிற் பாண்டியனெனவும் பாண்டியன் மாகீர்த்தியெனவும் வழங்கப்பெறுவன். தொல்காப்பியத்திற் குரைகண்ட பெரியாருள் ஒருவராகிய நச்சினார்க்கினியர் இவ்வேந்தன் இருபத்துநாலாயிரம் யாண்டு அரசு வீற்றிருந்தனனென்றும் இவனது பேரவையின்கண்ணேதான் தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்றதென்றும் கூறியுள்ளார்.* ஆசிரியர் கூறியுள்ள ஆண்டின்தொகை புனைந்துரையாயிருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆயினும் இவன் முடிசூடி நெடுகாலம் ஆட்சி புரிந்தோனாதல் வேண்டுமென்பது சங்கத்துச்சான்றோர் இவனை 'நெடியோன்' † என்று பல்லிடத்தும் குறித்துள்ளமையானே வெளியாகின்றது.

---

*தொல்காப்பியப்பாயிர உரை (நச்சினார்க்கினியம்) பக்கம் 9'

† (i) 'நிலந்தந்த பேருதவிப்–பொலந்தார் மார்பின் நெடியோனும்பல்.' (மதுரைக்காஞ்சி); (ii) முன்னீர் விழவின் நெடியோன், நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே- (புறம்—9.)

இவன், கடற்பிரளயத்தால் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த குமரிநாடு முதலியன அழிதற்குமுன்னர் அக்குமரிநாட்டில் பஃறுளி என்றதோர் ஆற்றை வெட்டுவித்துக் கடற்றெய்வத்திற்குவிழவெடுத் தனன். இச்செய்தி புறநானூற்றிலுள்ள ஒன்பதாம்பாடலால் ஊன் கறியப்படுகின்றது. ஆகவே இவன் தலைச்சங்கத்தினிறுதியில் வாழ்ந்தவனென்க.*

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி:—இவ்வேந்தன் வடிம் பலம்ப நின்ற பாண்டியனது வழியில் தோன்றியவன். இவனது இயற்பெயர் குடுமியென்பது. இவன் அரசர்க்குரிய பரிமேதம் முதலிய வேள்விகள்செய்து சிறப்புற்றவனாதலின் இவனது இயற் பெயருக்கு முன்னர்ப் 'பல்யாகசாலை' என்ற அடைமொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பாண்டியரது முன்னோர்களிலொருவன் ஆயி ரம் வேள்விகளியற்றிப் புகழ்பெற்றனனென்று சின்னமனூர்ச் செப் பேடுகள் கூறுகின்றன. இஃது இவ்வேந்தனையே குறிக்கின்றது போலும். இவனைக் 'கொல்யானை பலவோட்டிக்கூடாமன்னர் குடிாந் தவிர்த்த—பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதி ராசன்' என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பது ஈண்டு அறியத்தக்கது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழி யன் மீது அவனது அவைக்களப்புலவர் தலைவராகிய மாங்குடிமருத னாரால் பாடப்பெற்ற மதுரைக்காஞ்சியென்ற நூலிலுள்ள 'பல் சாலை முதுகுடுமித்—தொல்லாணை நல்லாசிரியர்—புணர்கூட்டுண்ட புகழ்சால்சிறப்பின்' என்ற அடிகளில் இவ்வேந்தன் புகழப்பட்டிருத் தல் காண்க. இதனால் சங்கச்செய்யுட்களிற் சொல்லப்பட்டுள்ள செய்திகள் பிற்காலத்துச் செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் உறுதியெய்துதல் நன்குணரத்தக்கது.

நமது முதுகுடுமியின் சிறப்பை விளக்கக்கூடிய ஐந்துபாடல் கள் புறநானூற்றிற் காணப்படுகின்றன. அவற்றைப் பாடினோர்,

---

* சின்னமனூர்ச் செப்பேடுகள் பாண்டியனொருவன் கடல்சுவற வேலெறிந்த கதையையும் ஒரு பாண்டியனிடத்துக் கடல் அடைக்கலம் புகுந்த கதையையும் குறிக்கின்றன. கடற்பிரளயத்தால் உலகங்களெல்லா மழிய, ஒரு பாண்டிய அரசன்மாத்திரம் உயிர்வாழ்ந்திருந்தசெய்தி வேள் விக்குடிச் செப்பேடுகளில் வரையப்பெற்றுளது. இம் மூன்று கதைகளும் வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றியனவேயாமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் என்ற புலவர்களே யாவர். அவர்களது பாடல்களால் அறிந்துகோடற்குரியவை:- இம் மன்னர்பெருமான் அக்காலத்தில் நிலவிய பல அரசர்களையும் புறங் கண்ட பெருவீரன்; வேண்டிய வேண்டியாங்கு புலவர்களுக்கும் இர வலர்களுக்கும் ஈந்த பெருங்கொடைவள்ளல்; அரசர்க்குரிய பல வேள்விகளை முடித்துப் பெருமையெய்தியவன்; சிவபெருமானிடத் தும் பெரியோர்களிடத்தும் பேரன்புடையோன்—என்பன. இவனை நெட்டிமையார் பாடியபாடல்களுள் ஒன்றைக் கீழே தருகின்றோம்.

'பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி
யின்னா வாகப் பிறர்மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே' (புறம்—12.)

மூன்றும் அதிகாரம்.

கடைச்சங்ககாலத்துப் பாண்டியர்கள்.

பாண்டியரது தலைநகராகிய மதுரையில் விளங்கிய கடைச்சங்கம் கி.பி. இரண்டாம்நூற்றாண்டோடு முடிவெய்தியது என்பது ஆராய்ச்சி யாளரது கொள்கையாகும். ஆகவே கி. பி. இரண்டாம் நூற்றாண் டிற்கு முன்னர் ஆட்சிபுரிந்த பாண்டிய அரசர்களது வரலாறே இப் பகுதியில் எழுதப்படுகின்றது. இறையனார்களவியற்கு உரைகண்ட தொல்லாசிரியர் கடைச்சங்கத்தைப் புரந்துவந்த பாண்டிமன்னர்கள் நாற்பத்தொன்பதின்மர் ஆவர் என்று அவ்வுரையிற் கூறியுள்ளார்.* சிலப்பதிகாரத்தின் உரைப்பாயிரத்திற்கு மேற்கோளாகக் காட்டப் பெற்ற 'வேங்கடங்குமரி தீம்புனற் பௌவம்' என்று தொடங் கும் ஆசிரியப்பாவும் அங்ஙனமே உணர்த்துகின்றது.† எனவே, கடைச்சங்கநாட்களில் அரசுசெலுத்திய பாண்டிய அரசர்கள் நாற் பத்தொன்பதின்மர் ஆவர் என்பது நன்கு புலப்படுகின்றது. அன் னோர் ஆட்சிபுரிந்தகாலம் ஆயிரத்தெண்ணூற்றைம்பது ஆண்டுகள் என்பர் களவியலுரைகண்ட பெரியார். ஆகவே ஒவ்வொரு மன்ன னது 'சராசரி' ஆட்சிக்காலம் சற்றேறக்குறைய முப்பத்தெட்

---

*இறையனார் அகப்பொருள் உரை. (சி. வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்பு) பக்கம் 5.

† சிலப்பதிகாரம்—பக்கங்கள் 2, 3.

டாண்டுகளாகும். கடைச்சங்ககாலத்துப் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள் சிலரது பெயர்களே நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களால் அறியப்படுகின்றன. அவர்களுள் பாண்டியன் முடத்திருமாறன் என்பவனே மிகப்பழமை வாய்ந்தவன் என்பது களவியலுரையால் பெறப்படுகின்றது. எனவே, அவன்வரலாற்றை முதலில் ஆராய்வாம்.

பாண்டியன் முடத்திருமாறன் :—குமரிநாடு கடல்கோளால் அழிந்தபின்னர், குமரியாற்றிற்கும் தாம்பிரபருணியாற்றிற்குமிடையிலுள்ள நிலப்பரப்பில் தங்கியிருந்த தமிழ்மக்களுக்குத் தலைநகராய் இருந்த கபாடபுரத்தில் வீற்றிருந்து அரசாண்டபாண்டிய அரசர் ஐம்பத்தொன்பதின்மருள் இவ்வேந்தனே இறுதியில் வாழ்ந்தவன் ஆவன். ஆகவே, இவன் இடைச்சங்கத்தின் இறுதியில் இருந்தவன் ஆதல்வேண்டும். இவன்காலத்தில் நிகழ்ந்த ஒரு கடல்கோளால் பாண்டியநாட்டின் பெரும்பகுதியும் அதன் தலைநகராகிய கபாடபுரமும் அழிந்தொழிந்தன. * இக்கடல்கோளினால் எண்ணிறந்த தமிழ் நூல்கள் இறந்தன. இச்செய்தியை,

'ஏரண முருவம் யோக மிசைகணக் கிரதஞ் சாலந்
தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள'

என்னும் பழையபாடலும் உணர்த்துதல் காண்க. தமிழ்மக்கள் செய்த தவப்பயனால் எஞ்சிநின்ற நூல் தொல்காப்பியம் ஒன்றேயாகும். இக் கடல்கோளுக்குத் தப்பியுய்ந்த பாண்டியன் முடத்திருமாறனும் செந்தமிழ்ப் புலவர்களும் சிறிது வடக்கே சென்று மணலூர் என்னும் ஒரு சிறு நகரத்தில் தங்கினார்கள். இவர்கள் சில காலம் அந்நகரில் தங்கியிருந்து, பின்னர், மதுரையென்று தற்காலத்து வழங்கும் கூடன்மா நகரையடைந்தனர். இப்பாண்டியனும் அந்நகரை வளம்படுத்தித் தனக்குரிய தலைநகராகக்கொண்டு கடைச்சங்கத்தை அங்கு நிறுவினான். † பல நல்லிசைப்புலவர்கள் தமிழ் ஆராய்ச்சி செய்யத்தொடங்கிப் பற்பல அரிய செந்தமிழ்நூல்கள் இயற்றுவாராயினர். இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழும் உயர் நிலை எய்தின. எனவே, கடைச்சங்கத்தை மதுரைமாநகரின்கண்

* இறையனார் அகப்பொருளுரை—பக்கம் 5.
† ஷை ஷை ஷை

நிறுவி அதனைப்போற்றிவளர்த்துவந்த பாண்டியன் முடத்திருமாறன் நம் தமிழ்த்தாயின்பொருட்டு ஆற்றிய அரும்பணி அளவிட்டு உரைக்குந்தரத்ததன்று. இம்மன்னனே தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த ஒண்டிறற்குரிசில் ஆவன். இவன் பாலைத்திணையையும் குறிஞ்சித்திணையையும் இன்சுவைபொருந்தப் பாடுவதில் வன்மை உடையவன். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய நற்றிணையில் இவன் பாடிய இரண்டுபாடல்கள் காணப்படுகின்றன. (நற்றிணை 105 ; 228.) இவனைப்பற்றிய பிறசெய்திகள் தற்காலத்திற் புலப்படவில்லை.

பாண்டியன் மதிவாணன் :—இவன் கடைச்சங்கத்தைப் புரந்துவந்த பாண்டிய அரசர்களுள் ஒருவனாவன். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் இவன் கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறியவன் என்று தம் உரைப்பாயிரத்திற் கூறியுள்ளார். ஆகவே இவன் செந்தமிழ்ப்புலமையிற் சிறந்துவிளங்கிய வேந்தனாவன். இவன் ஒரு நாடகத்தமிழ் நூல் இயற்றியுள்ளான். அது மதிவாணர் நாடகத்தமிழ் நூல் எனப்படும். அந்நூல், நூற்பாவாலும் வெண்பாவாலும் இயற்றப்பெற்றது என்பர். அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதுவதற்கு மேற்கோளாகக் கொண்ட *ஐந்து இசைநாடக நூல்களுள் மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் ஒன்றாகும். அது முதனூலிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தின் இலக்கணத்தை உணர்த்தும் சிறப்புடையது என்று சிலப்பதிகார உரையாளர் குறித்துள்ளனர். இம்மன்னன் இயற்றிய அத்தகைய பெருமைவாய்ந்த நாடகத்தமிழ்நூல் இந்நாளிற் கிடைக்கப்பெறாதிருத்தல் பெரிதும் வருந்தத்தக்கதாகும். சிற்சில சூத்திரங்களே சிலப்பதிகார உரையிற் காணப்படுகின்றன.

பொற்கைப்பாண்டியன் :—இவன் கடைச்சங்கநாளில் விளங்கிய பாண்டியருள் ஒருவன். கண்ணகி முன் தோன்றிய மதுரைமா தெய்வம் பாண்டியர்களது செங்கோற்பெருமையை அவளுக்குணர்த்துங்கால், இவன் செய்தியையும் எடுத்துரைத்துப் புகழ்ந்துள்ளது. அவ்வரலாறு அடியில் வருமாறு :—

ஒருநாள், கீரந்தை என்னும் வேதியனொருவன் தன் மனைவியை மன்றத்தின்கண் இருத்தி, அரசனது செங்கோல் அவளைக்காக்

* இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் என்பன.

கும் என்று கூறிவிட்டு வெளியே சென்றனன். மற்றொருநாள் அவன்தன் இல்லாளுடன் மனையகத்திருக்குங்கால், பாண்டிய அரசன் ஒருவன் கதவைப்புடைத்தனன். உடனே அம்மறையோன் தன் மனைவிபால் ஐயமுற்று அவளை நோக்க, அதனை யுணர்ந்த அந் நங்கை 'முன்னொருநாள், அரசனது செங்கோல் என்னைக் காக்கும் என்றுகூறி, மன்றத்திருத்திச் சென்றீர்களே; இன்று அச்செங் கோல் காவாதோ?' என்றுரைத்தனள். அதனைப் புறத்தே கேட் டுக்கொண்டுநின்ற அரசன், தன் செய்கைக்குப் பெரிதும்வருந்தி, விரைவில் அரண்மனைக்குச் சென்று, அது தனக்குத் தகவன்று என்றெண்ணித் தன் செய்கைக்குத் தானே சான்றாகி, வாளால் தன் கையைக் குறைத்துக்கொண்டனன்; பிறகு, பொன்னாற் பொய்க் கையமைத்துக்கொண்டு, பாண்டி நாட்டை ஆட்சிபுரிந்து வந்தான். இதுபற்றியே, இவன் பொற்கைப் பாண்டியன் என்றுவழங்கப் பெற்றான்.

இது சிலப்பதிகாரம், பழமொழியாகிய இருநூல்களாலுமறியப் படுவது. இஃது இப்பாண்டியன் கோல்கோடாது முறைசெய்த மாட்சியை உணர்த்துகின்றது.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி:—இவ்வேந்தன் கடைச் சங்கநாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவனாவன். இளம்பரு வத்திலேயே பேரறிவினனாக இருந்தமைபற்றி இவன் 'இளம்பெரு வழுதி' என்றபெயர் பெற்றனன் போலும். 'கடலுண்மாய்ந்த, என்னும் அடைமொழிகளால் இவன் கடலிற் கலமிவர்ந்து சென்ற போது அங்கு மூழ்கியிறந்திருத்தல் வேண்டுமென்பது புலப்படுகின் றது. இவன் தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த பெருந்தகை மன்னனா வன். இவன் இயற்றிய இரண்டு பாடல்கள் பரிபாடலிலும் புறநா னூற்றிலும் உள்ளன. (பரிபாடல் 15, புறநானூறு—182.) இவன் தான் இயற்றிய பரிபாடலில்* சிலம்பாற்றல் அழகுபெற்றுள்ள திரு மாலிருஞ்சோலைமலையின் சிறப்பையும் அங்கு எழுந்தருளியிருக்கும் கண்ணபிரான் பலதேவன் ஆகிய இருவரது பெருமையையும் நன்கு விளக்கியுள்ளான். இனி, அக்குன்றம் திருமாலையொக்கும் என்றும், தன்னைக் கண்டோருடைய மயக்கத்தைப்போக்கும் பெருமையுடைய தென்றும், ஆதலால் சென்றேனும் கண்டேனும் திசைநோக்கியே னும் அதனைக் குடும்பத்துடன் வழிபடுமின் என்றும் உலகத்தாரை

* இப்பாடற்கு இசை வகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனார் என் பார்.

நோக்கி இவ்வேந்தன் அப்பாடலிற் கூறியிருத்தலும் அக்குன்றத்தின் அடியின்கண் உறைதலே தான் எய்தவிரும்புவது என்று முடித்திருத்தலும் இவன் திருமாலிடத்துக் கொண்டிருந்த பேரன்பினை இனிது புலப்படுத்தாநிற்கும். இவன் புறநானூற்றில் பாடியுள்ள பொருண்மொழிக்காஞ்சி* இவனது பேரறிவினையும் உள்ளக் கிடக்கையினையும் தெள்ளிதினுணர்த்தும் இயல்புடையதாயிருத்தலின் அப்பாடலை ஈண்டுத் தருகின்றாம்.

'உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.' † (புறம்—182.)

பாண்டியன் அறிவுடை நம்பி:—இவன் பாண்டியர்குடியில் தோன்றிய ஒரு மன்னன் ஆவன். இவன் இருவேறு நல்வினைகளின் பயன்களாயுள்ள அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கே எய்தி அதற்கேற்றவாறு பேரறிவுடைய பெருங்கொடைவள்ளலாக வாழ்ந்தவன். கோப்பெருஞ்சோழற்கு உயிர்த்தோழரும் பாண்டிநாட்டினரும் பேரறிஞருமாகிய பிசிராந்தையார் இவ்வரசன்மீது பொருண்மொழிக்காஞ்சி பாடியிருத்தலின் இவன் அச்சோழன்

---

* பொருண்மொழிக்காஞ்சி என்பது உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதிதருகிற பொருளை ஒருவனுக்குக் கூறுதல்.

† இதன்பொருள்:—உண்டேகாண், இவ்வுலகம்; இந்திரர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தானுதல் தவத்தானுதல் தமக்கு வந்து கூடுவதாயினும் அதனை இனிதென்றுகொண்டு தனித்து உண்டலுமிலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அது தீர்த்தற்பொருட்டு மடிந்திருத்தலுமிலர்; புகழ்கிடைக்கின் தம்முடைய உயிரையுங் கொடுப்பர்; பழியெனின் அதனை உலகமுழுதும் பெறினும் கொள்ளார்; மனக்கவற்சியில்லார்; அப்பெற்றித்தாகிய மாட்சிமைப்பட்ட அத்தன்மையராகித் தமக்கென்று முயலாத வலிய முயற்சியையுடைய பிறர்பொருட்டென முயல்வார் உண்டாதலான்—என்பது.

காலத்தில் நிலவியவன் என்பது பெறப்படுகின்றது. (புறம்—184.) இவன் பாடிய பாடல்களாக நற்றிணையில் ஒன்றும் குறுந்தொகையில் ஒன்றும் அகநானூற்றில் ஒன்றும் புறநானூற்றில் ஒன்றும் உள்ளன. (நற்றிணை—15; குறுந்தொகை—230; அகம்—28; புறம்—188.) எனவே, இவனது செந்தமிழ்ப் புலமை அறிஞர்கள் பெரிதும் மதித்துப்போற்றற்குரியதாகும். இவன், மக்களாலுண்டாகும் இன்பம், இம்மை யின்பம் எல்லாவற்றினும் சிறந்ததென்றும் அத்தகைய மக்கள் இல்லாதவர்கட்கு இம்மைப் பயன் ஒரு சிறிதும் இல்லை என்றும் கூறியிருக்கும் அரியபாடல் எல்லோரும் படித்துணரத்தக்க தொன்றாகலின், அதனைப் பின்னே காண்க.

'படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.' * (புறம்—188.)

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் :—இவன் நல்லிசைப்புலமை வாய்ந்த செல்வப்பாண்டியருள் ஒருவன். புறநானூற்றிலும் அகநானூற்றிலும் காணப்படும் இவனது பாடல்களும் ஒல்லையூர்தந்த என்னும் அடைமொழிகளும் இவனது புலமையையும் வீரத்தையும் நன்குவிளக்கும். இவன் பெரிய போர்வீரனென்பதும், கல்வியறிவு வாய்ந்த பட்டத்தரசியைச் சிறிதும் பிரிதலாற்றாப் பேரன்புடையவனென்பதும், சிறந்த செங்கோல் வேந்தனென்பதும், வையை சூழ்ந்த வளம் மிக்க மையல் என்னும் ஊரில்வாழ்ந்த மாவன், எயில் என்னும் ஊரிலிருந்த ஆந்தை, புகழ்வாய்ந்த அந்துவஞ்சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் என்பவர்களைத் தனது உயிர்நண்பர்களாகக்கொண்டு ஒழுகியவனென்பதும், தனக்குரிய பாண்டிநாடா

* இதன்பொருள் :—படைக்கப்படுஞ் செல்வம் பலவற்றையும் படைத்துப் பலருடனே கூடவுண்ணும் உடைமை மிக்க செல்வத்தையுடையோராயினும் காலம் இடையே உண்டாகக் குறுகக் குறுக நடந்துசென்று சிறிய கையை நீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலேயிட்டும் கூடப் பிசைந்து தோண்டியும் வாயாற் கவ்வியும் கையால் துழாவியும் நெய்யை உடைய சோற்றை உடம்பின்கட் படச் சிதறியும் இங்ஙனம் அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குப் பயனுகிய முடிக்கப்படும் பொருளில்லை, தாம் உயிர்வாழுநாளின்கண்—என்பது.

ளும் அரசுரிமையை எவற்றினும் சிறந்ததாகக் கருதியிருந்தவனென் பதும், 'மடங்கலிற் சினைஇ மடங்காவுள்ளத்து' என்று தொடங் கும் இவனது பாடலால் இனிது புலப்படுகின்றன. (புறம்—71).

இவனது மனைவியாகிய பெருங்கோப்பெண்டு என்பாள் நல்லி சைப் புலமைவாய்ந்த மெல்லியல் நங்கையாவள். அருங்கற்புவாய்ந்த இவ்வம்மையின் பெருமையை உரைக்கவல்லார் யாவர்? செல்வமும் கல்வியும் ஒருங்கே அமையப்பெற்ற இவ்விருவரும் காதலனும் காத லியுமாக அன்புற்று ஆற்றிய இல்வாழ்க்கையே வாழ்க்கையாகும்; அதுவே துறக்கவின்பமும் ஆகும். அறிவு வீற்றிருந்த செறிவு டை நெஞ்சினராகிய பூதப்பாண்டியனும் இவனது காதலியாகிய பெருங்கோப்பெண்டும் இனிது வாழ்ந்து வருநாட்களிற் கொடுங் கூற்றம் பூதப்பாண்டியன் ஆருயிரைக் கவர்ந்துசென்றது. இந் நிலையிற் பெருங்கோப்பெண்டு எய்திய இன்னல் இத்தகையதென்று இயம்பவும் இயலுமோ! தாய்தந்தை முதலானோரை இழந்தோர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக்காட்டி அவர்களது துயரை ஆற்ற லாம்; கணவனை இழந்தார்க்கு அங்ஙனம் காட்டுவது இல்லையன்றோ? ஓவாத விதவையிடும்பை உயிருள்ளவரை ஒழிவதன்றே! இவற்றை நன்குணர்ந்துள்ள பெருந்தேவி ஆற்றொணாத் துன்பத்துள் ஆழ்ந் திருக்குங்கால் அரசனது உரிமைச்சுற்றத்தினர் அவனது திரு மேனியைப் பெருஞ்சிறப்புடன் சுடுகாட்டிற்கு எடுத்துச்சென்று ஈமத் தேற்றுவாராயினர். அதனைக்கண்ட பெருந்தேவி சிறிதும் ஆற் றாது அன்புடையாரைப் பிரிதலினும் அனலிற்புகுந்து ஆருயிர் துறத்தலே நலம் என்று துணிந்து தனது உயிர்க்காதலனொடு ஈமத் தீயிற் பாய்ந்து மாயக்கருதினாள். அச்சமயத்தில் அங்கிருந்த மதுரைப் பேராலவாயார் முதலான சான்றோர்கள் தம்மையொத்த பேரறிவுடைய வேந்தனை இழந்ததோடு அத்தகைய பேரறிவுவாய்ந்த அரசியையும் இழக்க மனம் பொறாதவர்களாய் அவ்வம்மையைத் தீப்புகாமல் விரைவில் தடைசெய்வாராயினர்.

அதுகண்ட அரசனது பெருந்தேவியும் தீயின்புறத்தே நின்று கொண்டு அச்சான்றோரை நோக்கிப், 'பலசான்றவிரே! பலசான்ற விரே! "நின் தலைவனொடிறப்ப நீ போ" வென்று கூறாது அதனைத் தவிர்கவென்றுசொல்லி விலக்கும் பொல்லாத விசாரத்தையுடைய பலசான்றவிரே! அணிலினது வரிபோலும் வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்திடப்பட்ட விதைபோன்ற நல்ல வெள்ளிய நறிய நெய்தீண்டாமல் இலையிடையேபயின்ற கையாற் பிழிந்து கொள்ளப்பட்ட நீர்ச்சோற்றுத்திரளுடனே வெள்ளிய

எள்ளரைத்த விழுதுடனே புளிகூட்டி அடப்பட்ட வேளையிலைவெந்த வேவையுமாகிய இவை உணவாகக்கொண்டு பருக்கைகளாற் படுக்கப் பட்ட படுக்கையின்கண் பாயுமின்றிக்கிடக்கும் கைம்மைநோன்பால் வருந்தும் பெண்டிருள்ளேம் அல்லேம் யாம்; புறங்காட்டின்கண் உண்டாக்கப்பட்ட கரிய முருட்டால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாவதாகுக; எமக்கு எம்முடைய பெரிய தோளை யுடையனாகிய கொழுநன் இறந்து பட்டானாக, முகையில்லையாக வளவிய இதழ்மலர்ந்த தாமரையையுடைய நீர்செறிந்த பெரிய பொய் கையும் தீயும் ஒருதன்மைத்து' என்னும் பொருள்கொண்ட 'பல் சான்றீரே பல்சான்றீரே'* என்று தொடங்கும் பாடலைக் கூறித் தீயிற்பாய்ந்து உயிர்துறந்தனள். இதனால் இவ்வம்மை தன் பெருங் கற்பினால் நிகழ்த்திய அருஞ்செயல் வெளியாதல் காண்க.

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்:—இவ்வேந் தர்பெருமான் மதுரைமாநகரில் கடைச்சங்கநாளில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்த பாண்டியர்களுள் ஒருவனாவன். இவன் ஆட்சிக்காலத்தி லேதான் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்களுள் ஒருவனாகிய கோவ லன் தன் மனைவியாகிய கண்ணகியுடன் வாணிகஞ்செய்யக்கருதி மதுரைக்குச்சென்றனன். அவன் அங்கு ஆயர்பாடியிலுள்ள இடைச் சியர்தலைவியாகிய மாதரியின் இல்லத்தில் தன்மனைவியை இருத்தி, அவளது சிலம்பொன்றை வாங்கிக்கொண்டு, அதனை விற்பதற்கு அகநகர்க்குட் சென்றபோது எதிரில்வந்த அரசாங்கப் பொற்கொல் லனது சூழ்ச்சியினாற் கோப்பெருந்தேவியின் சிலம்பு கவர்ந்த கள்வ னென்று இப்பாண்டியனால் கருதப்பட்டுக் காவலாளனால் வெட்டி வீழ்த்தப்பட்டான். இத்துன்பச்செய்தியை யுணர்ந்த கண்ணகி, தன் நாயகனை ஆராயாமல் அநீதியாகக் கொல்வித்த இவ்வரசன்பாற் சென்று தன் வழக்கை எடுத்துரைத்துத் தன் நாயகனாகிய கோவலன், கோப்பெருந்தேவியின் சிலம்புகவர்ந்த கள்வனல்லன் என்று மெய்ப் பித்தாள். உண்மையையுணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன், தான் ஒரு கற்புடைமகளின் கணவனை ஆராயாது கொல்வித்தமைக் குப் பெரிதும் கவன்று, அத்தீச்செயலை உன்னியுன்னி நெஞ்சம் நடுக்குற்றுத் தாழ்ந்த குடையனாய்த் தளர்ந்த செங்கோலனாய்ப்,

'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது; என் ஆயுள் கெடுக.'

---

* புறம்—246.

என்றுரைத்து அரசுகட்டிலில் மயங்கிவீழ்ந்து உயிர்துறந்தனன். தன்கணவன் இறந்தசெய்தியை யறிந்த கோப்பெருந்தேவியும் அத்துன்பத்தை ஆற்றுது சிறிதுநேரத்திற்குள் உயிர்நீத்தனள். தான் அறியாதுபுரிந்த ஒரு பிழைக்காகத் தன் ஆருயிரையே இவ்வரசன் போக்கிக்கொண்டனனெனின், இவனது ஆட்சிக்காலத்திற் குடிமக்கள் எல்லோரும் எத்தகைய இன்னல்களும் எய்தாது இன்புற்றுவாழ்ந் திருத்தல்வேண்டுமென்று கூறுவது சிறிதும் புனைந்துரையாகாது.

இப்பாண்டியனுக்கு நேர்ந்த தீவினைத்திறங்களைக் கேட்ட சேர மன்னனாகிய செங்குட்டுவன் பெரிதும் வருந்தித் தன்பால் வந்திருந்த சங்கப்புலவராகிய மதுரைக் கூலவாணிகன்சாத்தனாரை நோக்கிப், 'புலவீர்! அவன் செங்கோலினின்று தவறியசெய்தி என்னையொத்த அரசர்க்கு எட்டுமுன்னர் உயிர்துறந்தது, தீவினையால் வளைக்கப்பட்ட கோலை உடனே செங்கோலாக்கியது; அரசராயுள்ளார்க்குத் தம் நாட்டிற் காலத்தில் மழைபெய்யாதாயின் அச்சம்; உயிர்கள் தவறிழைக்குமாயின் அச்சம்; கொடுங்கோற்கஞ்சிக் குடிகளைப் பாதுகாத்தற்குரிய அரசர் குலத்திற்பிறத்தல் துன்பமல்லது தொழுதகவில்லை' என்று மிகவும் இரங்கிக்கூறிய அரியமொழிகள் ஈண்டு அறிந்துகோடற்கு உரியனவாகும்.

அன்றியும், மதுரைமாநகரம் தீப்பற்றியெரிந்தஞான்று, கண்ணகி முன்னர்த்தோன்றிய மதுரைமாதெய்வம் நெடுஞ்செழியனது செங்கோற்சிறப்பையும் கோவலனது ஊழ்வினை உருத்துவந்து தன் பயனை நுகர்வித்ததென்னும் உண்மையினையும் விளக்கிக்கூறியவரலாற்றைச் சிலப்பதிகாரத்திலுள்ள கட்டுரைகாதையிற் பரக்கக் காணலாம். இதனாலும் இவனது செங்கோலினதுமாண்பு ஒருவாறு இனிது புலனாகும்.

இனி, இவனது செங்கோற்பெருமையோடு ஒருங்குவைத்துப் புகழ்தற்குரியனவாய் அடுத்துநிற்பன இவனது வீரமும் செந்தமிழ்ப் புலமையுமாகும். இவன் வடநாட்டிலிருந்த ஆரியமன்னர்களைப் போரிற் புறங்கண்டு புகழெய்தியவன் என்பது,

'வடவாரியர் படைகடந்து
தென்றமிழ்நா டொருங்கு காணப்
புரைதீர்கற்பிற் றேவிதன்னுடன்
அரசுகட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்'

என்னும் இளங்கோவடிகளது அருமைத்திருவாக்கினாலும், இவனது இயற்பெயருக்குமுன்னர் அமைந்துள்ள 'ஆரியப்படைகடந்த' என்னும் அடைமொழியாலும் நன்கு வெளியாகின்றது.

இவன் கற்றோர்பால் மிக்க மதிப்புடையவன் என்பதும், கல்வி கற்றலையே பெரும்பயனாகக் கருதியவன் என்பதும் இவன்பாடியுள்ள 183-ஆம் புறப்பாட்டினால் அறியப்படுகின்றன. அப்பாடல் அடியில் வருமாறு :—

'உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றனன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.' *

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் :—ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் உயிர் துறந்தபின்னர், கொற்கைநகரத்தில் இளவரசாயிருந்து ஆட்சிபுரிந்துவந்த வெற்றிவேற்செழியன் என்பான் பாண்டிநாட்டை அரசாளும் உரிமையை எய்தினான். சேரன் செங்குட்டுவன் கண்ணகியின்படிமம் அமைத்தற்கு இமயத்தினின்றும் கல்கொணர வடநாட்டிற்குச் சென்றிருந்தபோது இவ்வரசிளங் குமரனுக்கு மதுரைமாநகரில் முடிசூட்டுவிழா நடைபெற்றது.† இவன் முடிசூடிக் கொண்டபின்னர் நன்மாறன் என்ற வேறு

* இதன் பொருள்:—தம் ஆசிரியர்க்கு ஓர் ஊறுபாடுற்றவிடத்து அது தீர்த்தற்குவந்து உதவியும் மிக்கபொருளைக் கொடுத்தும் வழிபாட்டு நிலைமையை வெறாது கற்றல் ஒருவற்கு அழகிது; அதற்கு என்னோ காரணமெனின், பிறப்பு ஒரு தன்மையாகிய ஒருவயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும்; ஒரு குடியின்கட் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருகவென்னாது அவருள் அறிவுடையோன் சென்றநெறியே அரசனும் செல்லும்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்தில் ஒருவன் கற்பின் மேற்குலத்துளொருவனும் இவன் கீழ்க்குலத்தானென்று பாராது கல்விப் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவானாதலால்—என்பது.

† சிலப்பதிகாரம்—நீர்ப்படைக்காதை 127—138.

பெயருடையவனுய்த் திகழ்ந்தனன் என்று தெரிகின்றது. இவனது ஆட்சிக்காலத்திற் பாண்டிநாடு மழைவளமிழந்து வறுமையுற்றிருந்தது. அவ்வறுமை நீங்கிக் குடிகள் இன்புற்றுவாழுமாறு இவ்வேந்தன் கண்ணகியின்பொருட்டுப் பெருவிழா ஒன்று நடத்தினன். இதனுற் கண்ணகியின் சினம் தணியவே, நாடு நன்னிலைமை எய்திற்று; குடிகளும் இனிது வாழ்ந்தனர். புறநானூற்றில் இவனைப் பாடியுள்ள புலவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் என்பவரே யாவர். அப்பாடலால் (புறம்—59) இவனது அருங்குணங்கள் பலவும் வெளியாகின்றன. இவன் சித்திரமாடத்து இறந்தான் போலும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் :—இவன் கடைச்சங்கநாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவன். இவனைச் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனது புதல்வன் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவனது தந்தை சின்னுட்களே அரசுசெலுத்தியமையின் இவன் இளமையிலேயே அரசு கட்டிலேறல் இன்றியமையாததாயிற்று. இவன் ஆட்சிபுரிந்துவரும் நாட்களில், சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் இந்நெடுஞ்செழியனை இளைஞன் என்று இகழ்ந்து கூறிப் பாண்டிநாட்டைக் கைப்பற்றக்கருதி மதுரைமாநகரை முற்றுகையிட்டார்கள். இதனையுணர்ந்த நெடுஞ்செழியன், பெருஞ்சினங்கொண்டு, 'புல்லிய வார்த்தைகளைக் கூறிய சினம்பொருந்திய அரசரைப் பொறுத்தற்கரிய போரின்கண்ணே சிதறப்பொருது, முரசத்தோடு கூட அவரைக் கைக்கொண்டிலேனுயின், பொருந்திய எனது குடை நிழற்கண் வாழ்வோராகிய குடிமக்கள், தாங்கள் சென்றடையும் நிழற் காணுதே கொடியன் எம்முடைய வேந்தன் என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிப் பழிதூற்றும் கொடுங்கோலை உடையேனுகுக; உயர்ந்த தலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய மாங்குடிமருதன் முதல்வனுக உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழுந் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக எனது நிலவெல்லைமை; என்னுற் புரக்கப்படுங்கேளிர் துயரம்மிக இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யானுற' என்று வஞ்சினங் கூறிப் போருக்கெழுந்து உழிஞைசூடிப் போர்புரியத்தொடங்கினன். இவன் மிக்க இளைஞனுபினும் சிறிதும் அஞ்சாமற் கடும்போர் புரிந்து அன்னவர் எழுவரும் புறங்காட்டி ஓடச்செய்தனன். தோல்வியுற்ற எழுவரும் ஓடிச்சென்று சோழநாட்டிற் புகும்போது

நெடுஞ்செழியன் அவர்களைவிடாது பின்தொடர்ந்துசென்று தலையாலங்கானத்து மறித்துப் பெரும் போர்நடத்தி வாகைமிலைந்தனன். (புறம்—19, 23.) இவன், இதனோடு நில்லாமற் பகைஞர்களை அவர்களது உறையூர், வஞ்சி முதலான நகரங்கள் வரையிற் போர்ப் பறையொலிப்பத் துரத்திச்சென்று அன்னோரது உரிமைமகளிர் நாணமுற்று உயிர்துறக்குமாறு அவர்களைக்கொன்றனன் (புறம்—78.) வேள்எவ்வி முன்னர் ஆட்சிபுரிந்ததும் இருங்கோவேண்மானுக் குரியதுமாகிய மிழலைக் கூற்றத்தையும் அதற்கடுத்துள்ளதும் வேளிர்களுக்குரியதுமாகிய முத்தூர்க் கூற்றத்தையும்* இப்போரின் இறுதியிற் கைப்பற்றிப் பாண்டிநாட்டோடு சேர்த்துக்கொண்டான். (புறம்—24.) இப்போர் நிகழுங்கால், இவன் மிகவும் இளஞ்ஞயிருந்தனன் என்பது, 'சதங்கை வாங்கப்பட்ட காலிலே ஒள்ளிய வீரக்கழலினைச் செறித்துக் குடுமியொழிக்கப்பட்ட சென்னிக் கண்ணே வேம்பினது ஒள்ளியதளிரை நெடியகொடியாகிய உழிஞைக் கொடியோடு சூடிக் குறிய வளைகளையொழிக்கப்பட்ட கையின் கண்ணே வில்லைப்பிடித்து நெடிய தேரினதுமொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாரோதான்? யாரேயாயினும் அவன் கண்ணி வாழ்வதாக; தாரையணிந்து ஐம்படைத்தாலி கழித்ததுமிலன்; பாலை ஒழித்து உணவும் இன்றுண்டான்; முறைமுறையாக வெகுண்டு மேல்வந்த புதியவீரரை மதித்ததும், அவமதித்ததும் இலன்; அவரை யிறுகப் பிடித்துப் பரந்த ஆகாயத்தின்கண்ணே ஒலியெழக் கவிழ்ந்து உடலம் நிலத்தின்கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும், இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும் அதனினும் இலன்;' என்னும் பொருள்கொண்ட 'கிண்கிணி களைந்தகால்' என்று தொடங்கும் இடைக்குன்றூர்கிழாரது பாடலால் தெளிவாகப் புலப்படுகின்றது (புறம்—77.)

இவ்வேந்தன், இரவிற் பாசறையின்கண் போரிற் புண்பட்ட வீரர்களைப் படைத்தலைவன் முன்னே காட்டிச்செல்லத் துயில் சிறிதுமின்றித் தானே அவர்களை நேரிற்கண்டு அன்புடன் இன் சொற்கூறிப்பாராட்டுவது வழக்கம் என்பது 'வேப்பந்தாரைத் தலையிலேகட்டின வலிய காம்பினையுடைய வேலோடே முன்செல்கின்ற சேனாபதி புண்பட்ட வீரரை அடைவே அடைவே காட்ட.......... செருக்கின குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலே வீசுந் துளிகளையுதற, இடத்தோளினின்றும் நழுவிவிழ்ந்த அழகினை

* இவை புதுக்கோட்டை இராச்சியத்திலும் தஞ்சாவூர்ஜில்லா அறந்தாங்கித் தாலுகாவிலும் உள்ள பிரதேசங்களாகும்.

யுடைய ஒலியலே இடப்பக்கத்தே யணைத்துக்கொண்டு, வாளைத் தோளிலே கோத்த தறுகண்மையுடைய வாளெடுப்பான் தோளிலே வைத்த வலக்கையையுடையவனாய்ப் புண்பட்டவீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற முகம்பொருந்தி, நூலாலே சட்டத்தைக் கட்டின முத்த மாலையையுடைய கொற்றக்குடை தவ்வென்னும் ஓசைப்பட்டு அசைந்து பரக்கின்ற துளியைக்காக்க நள்ளென்னும் ஓசையை யுடைய நடுயாமத்துப் பள்ளிகொள்ளானாய்ச் சிலவீரரோடு புண்பட் டோரைப் பரிகரித்துத் திரிதலைச்செய்யும் அரசன்' என்று பொருள் படும் 'வேம்புதலையாத்த நோன்காழெஃகமொடு' என்னும் நெடுநல் வாடைப் பாடற்பகுதியால் நன்கறியக்கிடக்கின்றது.

இங்ஙனம் பெருவீரனாகிய இந்நெடுஞ்செழியன், தான் ஒருவ னாக நின்று பேரரசர் இருவரையும் சிற்றரசர் ஐவரையும் தலையாலங் கானத்து வென்றசெய்தி மூன்றும் இராசசிங்கபாண்டியனது சின்ன மனூர்ச்செப்பேட்டிலும் குறிக்கப்பெற்றுளது.

இனி, 'நகுதக்கனரே நாடுமீக்கூறுநர்' என்ற 72-ஆம் புறப் பாட்டினால், இம்மன்னன் கற்றுத்துறைபோய காவலன் என்பதும், கற்றோர்பாற் பேரன்பும் பெருமதிப்பும் உடையவன் என்பதும் நன்கு விளங்குகின்றன. இவன் புலவர் பெருமக்களிடத்து எத்தகையமதிப்பு வைத்திருந்தனன் என்பது,

'ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை'

என்னும் புறப்பாட்டடிகளில் இவன் கூறியுள்ள உயர்மொழிகளால் ஒருவாறு புலப்படும்.

பத்துப்பாட்டிலுள்ள மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் இவ்வேந்தன்மீது பாடப்பட்ட நூல்களேயாகும். இவ்வரிய நூல்களைப் பாடிய புலவர்பெருமக்கள் முறையே மாங்குடிமருதனாரும் மது ரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாருமேயாவர்.

நெடுஞ்செழியன் போர்விருப்பு மிக்குடையவனாய்,

'ஒளிறிலைய வெஃகேந்தி
அரசுபட வமருழக்கி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்டு'

வாணுட்களைக் கழித்துவந்தமையின், இவனது அவைக்களப் புலவர் தலைவராகிய மாங்குடிமருதனரென்பார் வீடடைதற்கேதுவான அற நெறியைக் கடைப்பிடித்தொழுகுமாறு இவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தற்கருதியே 'மதுரைக்காஞ்சி' என்றதோர் அரியநூலை இயற்றியுள்ளார். இந்நூலால் இவனது முன்னோரது பெருமையும் இவனது செங்கோற் சிறப்பும் வீரமும் பாண்டிநாட்டின் வளமும் மதுரைமாநகரின் வனப்பும் பிறவும் இனிதுணரப்படும். இஃது எழுநூற்றெண்பத்திரண்டு அடிகளையுடையது.

'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றென்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந'

என்னும் மதுரைக்காஞ்சியடிகளிற் பாண்டியராக மதுரையில் வீற் றிருந்து அரசாண்ட சோமசுந்தரக்கடவுளின் வழியில் தோன்றிய வன் இந்நெடுஞ்செழியன் என்று மாங்குடிமருதனர் குறித்திருப் பது ஈண்டு அறியத்தக்கது.

பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி:—கடைச் சங்கத்தைப் புரந்துவந்த பாண்டிய மன்னர்களுள் இவனே இறுதி யில் இருந்தவன். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண் டியன் நெடுஞ்செழியனது புதல்வன் என்று ஆராய்ச்சியாளர் கருது கின்றனர். இவன் தன் பகைஞனுகிய வேங்கைமார்பனைப் போரில் வென்று அவனுக்குரிய கானப்பேரெயில் (காளையார்கோயில்) என் னும் ஊரைக் கைப்பற்றியவனுதலின் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்று வழங்கப்பட்டனன். (புறம்—21.) மாரி வெண்கோ என்னும் சேரமன்னனும் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி என்ற சோழமன்னனும் இவனுக்குச் சிறந்த நண்பர்களாக இருந்தனர். (புறம்—367.) இவன் சங்கப்புலவர்களோடு ஒப்பப் பாடும் ஆற்றலுடைய பெரும்புலவனுக விளங்கியமை ஈண்டு உணரத் தக்கது. மதுரை உப்பூரிகுடிகிழார்மகனுவார் உருத்திரசன்மரைக்

கொண்டு அகநானூறு தொகுப்பித்தோன் இவ்வேந்தனேயாவன். இவன் தலைமையிலேதான் கடைச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றப் பெற்றது என்று ஒரு கதை வழங்குகிறது; இஃது உண்மையன்று என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவன் குறிஞ்சியையும் மருதத்தையும் புனைந்துபாடுவதில் வன்மையுடையவன். இவன் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும் அகநானூற்றில் ஒருபாடலும் உள்ளன. (நற்றிணை—98; அகநானூறு—26.) இவன் காலத்திற்குப் பின்னர், கடைச்சங்கம் நடைபெறுமல் அழிவுற்றது என்பது களவியலுரையால் உணரப்படுகின்றது. ஆனால், அச்சங்கம் அழிந்தமைக்குத் தற்காலம் சொல்லப்படுங் காரணங்கள் உண்மை என்று தோன்றவில்லை. இவனுக்குப் பிறகு, பாண்டிநாட்டில் அக்காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னர் யாவரென்பது இப்போது புலப்படவில்லை.

இனி, இவ்வேந்தர்களேயன்றிக் கடைச்சங்கநாளில் வேறு சில பாண்டிய மன்னர்களும் இருந்தனர் என்பது சங்கத்துச் சான்றோர் அருளிய எட்டுத்தொகைநூல்களால் அறியப்படுகின்றது. அன்னோர், கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி, பன்னாடுதந்த பாண்டியன் மாறன்வழுதி, நல்வழுதி, கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி, இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன், வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி, நம்பி நெடுஞ்செழியன், குறுவழுதி என்போர். அவர்களைப்பற்றிய வரலாறுகள் நன்கு புலப்படாமையின், சிற்சில குறிப்புக்களே ஈண்டு எழுதப்படுகின்றன.

கருங்கையோள்வாட் பெரும்பெயர் வழுதி:—சோழன் கரிகாற் பெருவளத்தான் காலத்தில் இருந்தவன். அவ்வளவனது மாமனாகிய இரும்பிடர்த்தலையார் என்ற புலவராற் பாடப்பெற்றவன்; மிக்க வீரமும் கொடையும் உடையவன். (புறம்—3.)

பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி:—சிறந்தசெந்தமிழ்ப் புலவன்; (குறுந்தொகை—270.) எட்டுத்தொகையுள் ஒன்றாகிய நற்றிணையைத் தொகுப்பித்தோன் இம்மன்னனே யாவன். (நற்றிணை இறுதிக் கட்டுரை.)

நல்வழுதி:—வையையாற்றைச் சிறப்பிக்கும் பன்னிரண்டாம் பரிபாடலை இயற்றியவன். இப்பாடலிற் கூறப்பெற்றுள்ள புதுநீர் விழாவும் வையையின் சிறப்பும் படித்தின்புறத்தக்கன.

கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி:—வடபுலமன்னர்களைப் போரிற் புறங்கண்டு வெற்றிப்புகழை எங்கும் பரப்பிய பெருவீரன் (புறம்—51, 52.)

இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்:—வண்மையும் வீரமும் உடையவன் என்பது புலவர் தலைவராகிய நக்கீரனார் பாடிய 56-ஆம் புறப்பாட்டினால் நன்கு விளங்குகின்றது. இப்பாட்டினாற் கடைச்சங்ககாலத்தில் மேனாட்டு யவனர்கள் நம் தமிழகத்தில் மது வகைகளைக் கொணர்ந்து விற்றுவந்தனர் என்பது இனிதுணரப்படுகின்றது.

குறுவழுதி:—அகநானூற்றிலுள்ள 150-ஆம் பாடலை இயற்றிய வேந்தனாவன்.

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி:—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவராற் புகழ்ந்து பாடப் பெற்றவன்; (புறம்—58.) சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனுக்குச் சிறந்த நட்பினன்.

நம்பி நெடுஞ்செழியன்:—அரசர்கட்குரிய எல்லா இன்பங்களையும் துய்த்து, வண்மை வீரம் நடுநிலைமை முதலான அருங்குணங்களெல்லாம் ஒருங்கே யமையப்பெற்றுப் பெருமையோடும் புகழோடும் வாழ்ந்தவன். இவன் இறந்தஞான்று பேரெயின்முறுவலார் என்னும் புலவர் பாடியுள்ள கையறுநிலை எத்தகையோருடைய மனத்தையும் உருகச்செய்யும் இயல்பு வாய்ந்ததாகும். (புறம்—239.)

இனி, கடைச்சங்கம் இரீஇய பாண்டியமன்னர் நாற்பத்தொன்பதின்மருள் கவியரங்கேறினார் மூவர் என்று இறையனாரகப்பொருளுரை உணர்த்துகின்றது. சங்கநூல்களை ஆராய்ந்து பார்க்குங்கால், தண்டமிழ்ப் புலமைசான்ற ஒண்டிறற் பாண்டியமன்னர்கள் பன்னிருவர், கடைச்சங்கநாளில் இருந்துள்ளார் என்பது நன்கு புலப்படுகின்றது. இப்பன்னிருவரும் இயற்றியுள்ள சிறந்த செந்தமிழ்ப்பாக்கள் நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு ஆகிய ஐந்து தொகை நூல்களிலும் காணப்படுகின்றன. எனவே, சங்கப்புலவர்களோடு ஒப்பப்பாடும் புலமையும் பெருமையும் வாய்ந்துள்ள இப்பன்னிரு பாண்டிமன்னர்களும் கவியரங்கேறியவர்களாதல் வேண்டுமன்றோ? அங்ஙனமாயின், கடைச்சங்கம் இரீஇய பாண்டியர்களுள் கவியரங்கேறினார் மூவர் என்று இறையனாரகப் பொரு

னுரை உரைப்பது சிறிதும் பொருந்தவில்லை. ஆகவே, இதனை அறிஞர்கள் ஆராய்ந்து உண்மையை உணர்த்துவார்களாக.

இனி, இம்மன்னர்களது ஆட்சிக்காலங்களை வரையறுத்துரைப்பதும் எவனுக்குப்பின் எவன் பட்டத்திற்கு வந்தனன் என்பதையும் ஒருவனுக்கு மற்றொருவன் என்ன முறையினன் என்பதையும் சங்க நூல்களைக்கொண்டு ஆராய்ந்து கூறுவதும் இயலாதவையாயுள்ளன. நுணுகியறிந்தவற்றை ஆங்காங்குக் குறித்துள்ளோம். கடைச்சங்க காலத்தின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த பாண்டிய அரசர்களைச் சில ஆராய்ச்சியாளர் அடியில் வருமாறு முறைப்படுத்தி எழுதியுள்ளனர்.

(1) ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்.

(2) வெற்றிவேற்செழியன் என்ற சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்.

(3) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

(4) கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி.

நான்காம் அதிகாரம்.

பாண்டிநாட்டிற் களப்பிரர் ஆட்சி.

பாண்டியருள் வலியிழந்த ஓரரசன் ஆட்சிபுரியும்போது களப்பிரர் வகுப்பைச்சேர்ந்த ஒரு மன்னன் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அதனைக் கவர்ந்துகொண்டு அரசாளத்தொடங்கினன். சங்கநூல்களிற் 'களப்பிரர்' என்ற மொழியே காணப்படவில்லை. கி. பி. 500-ல் வாழ்ந்தவராகிய வராகமிகிரரும் தென்னாட்டவரின் வரிசையிற் களப்பிரரைக் குறிக்கவில்லை. ஆனால், கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளிலிருந்த பல்லவவேந்தர்களாகிய சிம்மவிஷ்ணுவும் முதல் நரசிம்மவர்மனும்* மேலைச்சளுக்கிய வேந்தர்களாகிய முதல் விக்கிரமாதித்தனும் விசயாதித்தனும் இரண்டாம் விக்கிரமாதித்தனும் † களப்பிரரை வென்றதாகக் கூறிக்கொள்ளு

---

* South Indian Inscriptions Vol. I, page 152, Vol. II page 356.

† Indian Antiquary Vol. VII, page 303, Vol. IX, page, 129, Epigraphia Indica Vol. V, page 204.

கின்றனர். ஆகவே, இவர்கள் கி. பி. ஆறும் நூற்றுண்டின் முற்பகுதியிலேதான் பாண்டிநாட்டைக் கவர்ந்திருத்தல் வேண்டும். ஆயினும் இவர்கள் அந்நாட்டை நீண்டகாலம் ஆட்சிபுரியவில்லை. இவர்களது ஆட்சி சிறிதுகாலமே நடைபெற்றதென்பது, பாண்டியன் கடுங்கோன் என்பான், பாண்டிநாட்டைக் கவர்ந்துகொண்ட அக் களப்பிரவேந்தனையே போரிற் புறங்கண்டு தன் நாட்டைக் கைப்பற்றி மீண்டும் அரசாளத்தொடங்கினன் என்று கூறும் வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது.* இது நிகழ்ந்தது சற்றேறக்குறையக் கி. பி. 560-ஆம் ஆண்டில் என்பர்.

இனி, பெரியபுராணத்து மூர்த்திநாயனர் புராணமும்† நம்பி திருவிளையாடற் புராணமும்‡ கருநாடவேந்தனொருவன் பாண்டி மண்டலத்தைக் கவர்ந்தாண்டனனென்றும், அவன் காலத்தே வைதிக நெறியும் சைவநெறியும் ஒருங்கே அழியச் சமணசமயம் மிகச் செழித்ததென்றும், பின்னர் ஓரிரவில் அவன் கொல்லப்பட்டான் என்றும் கூறுகின்றன. இவ்விரு நூல்களும் கூறும் கருநாடவேந்தன் களப்பிரனுகத்தானிருத்தல் வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சியாளரும் இங்ஙனமே எண்ணுகின்றனர்.

---

* வேள்விக்குடிச் செப்பேடுகளில் 4-ஆம் ஏடு பக்கம் 1

† கானக்கடி சூழ்வடு கக்கரு நாடக்காவன்
மானப்படை மன்னன் வலிந்து நிலங்கொள்வானுய்
யானைக்குதி ரைக்கரு விப்படை வீரர்திண்டேர்
சேனைக்கட லுங்கொடு தென்றிசை நோக்கிவந்தான்.

வந்துற்றபெ ரும்படை மண்புதை யப்பரப்பிச்
சந்தப்பொதி யிற்றமிழ் நாடுடை மன்னன்வீரம்
சிந்தச்செரு வென்றுதன் ஞணை செலுத்துமாற்றுற்
கந்தப்பொழில் சூழ்மது ராபுரி காவல்கொண்டான்.

(பெரியபுராணம்—மூர்த்திநாயனர் புராணம்)

‡ துன்னு சேனையிற் றுளங்கிய வொருகரு நாட
மன்ன னன்னநாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கை விழுந்து
முன்ன நீடிய வைதிக முறையையு மொழிந்தான்.

ஐந்தாம் அதிகாரம்.

கி. பி. 575 முதல் கி. பி. 900 வரை ஆட்சிபுரிந்த பாண்டியர்கள்.

பாண்டியன் கடுங்கோன்:—இம்மன்னன் கி. பி. 575 முதல் கி. பி. 600 வரையில் ஆட்சிபுரிந்தனன் என்று தெரிகிறது. பாண்டி நாட்டிற் சில பகுதிகளைக் களப்பிரரிடத்தினின்று முதலில் கைப்பற்றி மீண்டும் பாண்டியரது ஆட்சியை மதுரையில் நிலைபெறுமாறு செய்தவன் இவ்வேந்தனேயாவன். இவன் களப்பிரரைப் போரிற் புறங்கண்டு அன்னோரது ஆளுகைக்குட்பட்டிருந்த தன் நாட்டைக் கைப்பற்றி அரசுசெலுத்திய வரலாற்றை வேள்விக்குடிச் செப்பேடுகள் நன்கு விளக்குகின்றன. அப்பகுதி:—

'களப்ரனென்னுங் கலியரசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடன் முளைத்த பருதிபோற் பாண்டியாதிராசன் [வெளிப்பட்டு
விடுகதிரவிரொளி விலக வீற்றிருந்து
வேலைசூழ்ந்த வியலிடத்துக்
கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழற்
றங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை திறவிதி னீக்கித்
தன்பா லுரிமை நன்கன மமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்னர் ஒளிநக ரழித்த
கடுங்கோ னென்னுங் கதிர்வேற் றென்னன்.'

என்பது. இதனால் இவனது வீரமும் புகழும் இனிது புலப்படுதல் காண்க.

இனி, தென்மதுரையின்கண் விளங்கியதாகச் சொல்லப்படும் முதற்சங்கத்தைப் புரந்த பாண்டியருள் இறுதியிலிருந்தவன் கடுங்கோன் என்று இறையனாரகப்பொருளுரை உணர்த்துகின்றது. இவன் மிகப்பழையகாலத்தில் நிலவிய முதற்சங்கத்தைப் புரந்தவன்; களப்பிரரை வென்ற கடுங்கோன் கடைச்சங்கத்திறுதிக் காலத்திற்குச் சுமார் நானூறு ஆண்டுகட்குப் பின்னர் இருந்தவன். எனவே, கடுங்கோன் என்னும் பெயர்கொண்ட இவ்விருவரும் வேறு

வேறு காலத்தில் வாழ்ந்த வெவ்வேறு மன்னவராவர். ஆகவே பெயரொற்றுமை ஒன்றையே கொண்டு இவ்விருவரையும் ஒருவர் என்று கூறுதல் உண்மையும் பொருத்தமும் உடையதன்று.

மாறவர்மன் அவனி சூளாமணி :—இவன் பாண்டியன் கடுங்கோனது மகன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இவன் கி. பி. 600 முதல் 625 வரை ஆட்சிபுரிந்த பாண்டியனாவன். இவன் காலத்தில் நிகழ்ந்த செய்திகளுள் ஒன்றும் புலப்படவில்லை. இவன் காலம் முதல் பாண்டியர்கள் 'மாறவர்மன்' 'சடையவர்மன்' என்ற பட்டங்களை ஒருவர்பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்து வருவாராயினர். மாறவர்மன் என்ற பட்டத்தை முதலிற் புனைந்து வாழ்ந்தவன் இவ்வேந்தனேயாவன்.

இவர்களைப்போற் சோழமன்னர்களும் 'இராசகேசரி' 'பரகேசரி' என்ற பட்டங்களை ஒருவர்பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்து வந்தமை ஈண்டு அறியத்தக்கதாகும்.

செழியன் சேந்தன் :—இவன், மாறவர்மன் அவனிசூளாமணியினது புதல்வன்; சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து கி.பி. 625 முதல் கி. பி. 640 வரையில் பாண்டிநாட்டில் அரசாண்டவன். இவனைச் 'சிலைத்தடக்கைக் கொலைக்களிற்றுச் செழியன்' எனவும் 'மண்மகளை மறுக்கடிந்த வேந்தர் வேந்தன்' எனவும், 'செங்கோற் சேந்தன்' எனவும் வேள்விக்குடிச் செப்பேடுகள் புகழ்கின்றன. இவனது ஆட்சியின் இறுதிக்காலத்தேதான் சீனதேயத்தினனாகிய 'யுவான்சுவாங்' என்பான் பல்லவர்களது தலைநகராகிய காஞ்சிக்கு வந்தனன். இவன் அங்நகரிலிருந்து பாண்டிநாட்டிற்குச் செல்லப் புறப்படுங்கால் பாண்டிமன்னன் அப்போதுதான் இறந்தனன் என்றும் அங்நாட்டிற் பஞ்சம் மிகுந்திருந்தது என்றும் தனக்குக் காஞ்சியிலுள்ளவர்கள் அறிவித்த செய்திகளைத் தன் வரலாற்றுக் குறிப்பில் வரைந்துள்ளான். எனவே, கி. பி. 640-ஆம் ஆண்டில் இறந்ததாக இவனாற் குறிக்கப்பெற்ற பாண்டியன், இச்செழியன் சேந்தனேயாவன். இவனைப்பற்றிய பிறசெய்திகளை யுணர்த்தும் கருவிகள் தற்காலத்துக் கிடைத்தில.

மாறவர்மன் அரிகேசரி :—செழியன்சேந்தன் இறந்தபின்னர் அவனது புதல்வனாகிய அரிகேசரி என்பான் கி. பி. 640-ஆம் ஆண்டிற் பட்டம் எய்தினன். இவன் மாறவர்மன் என்றபட்டம் புனைந்தவன். இவனைச் சுந்தரபாண்டியன் எனவும் கூன்பாண்டியன் என

வும் திருவிளையாடற் புராணம் கூறுநிற்கும். இவன் முதலிற் சமண மதப்பற்றுடையவனுயிருந்து அம்மதத்தைப் பெரிதும் ஆதரித்து வந்தான்; பிறகு சைவசமயாசாரியருள் ஒருவராகியதிருஞானசம்பந்த மூர்த்திகளாற் சைவனுக்கப்பட்டான். இவன் முன்னிலையிற்றான் திருஞானசம்பந்தருக்கும் சமணமுனிவர் எண்ணுயிரவர்க்கும் அனல் வாதமும் புனல்வாதமும் நிகழ்ந்தன. இவனது மனைவி மங்கையர்க் கரசி எனப்படுவர். இவ்வம்மையார் சோழமன்னரது புதல்வியார் என்று திருஞானசம்பந்தர் கூறியுள்ளார். இவர்கள் காலத்திற் பாண்டிநாட்டில் அமைச்சராயிருந்தவர் குலச்சிறையார் என்பவர். இவர்கள் மூவரும் சைவசமயத்திற் பெரிதும் ஈடுபாடுடையவர்களாக விளங்கியவர்கள். சிவபிரானிடத்துப் பேரன்பு பூண்டொழுகிய பாண்டியன் அரிகேசரி,* மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இம்மூவரும் சிவனடியார் அறுபத்துமூவருட் சேர்க்கப் பெற்றுள்ளனர். இவர்களது வரலாற்றைப் பெரியபுராணத்திற் காணலாம்.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்திற் பாண்டிநாடு உயர்நிலையை அடைந்தது. இவன், சேரர்களையும் சில குறுநிலமன்னர்களையும் பாழி, நெல்வேலி, செந்நிலம் முதலான இடங்களில் வென்றனன் என்றும், ஒருபகலிற் சோழர்களுக்குரிய உறையூரைக் கைப்பற்றின னென்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவன் புரிந்த இப்போர்களை இறையனாரகப் பொருளுரையிலுள்ள மேற்கோட் பாடல்களும் எடுத்தியம்புகின்றன. (பாடல்கள் 22, 106, 235, 309.) சைவசமயாசாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி களும் 'நெல்வேலிவென்ற நின்றசீர் நெடுமாறனடியார்க்கும் அடி யேன்' என்ற திருத்தொண்டத்தொகைப் பாடற்பகுதியில் நெல் வேலிப்போரில் இவன் வெற்றியெய்திய செய்தியைக் குறித்துள் ளார். எனவே, சேரர்களும் பல குறுநிலமன்னர்களும் இவனுக் குத் திறைசெலுத்த, இவன் வேந்தர்வேந்தனாய்ச் சிறப்புற்று வாழ்ந் தவன் என்பது நன்கு புலப்படுகின்றது.

இவனது ஆளுகையின் தொடக்கத்தில்தான் சீனதேயத்தின னாகிய 'யுவான்சுவாங்' என்பான் பாண்டிநாட்டிற்குச் சென்ற னன். அவன்தன் வரலாற்றுக்குறிப்பில் 'பாண்டிநாட்டில் முத்தும்

---

* இவனது சிவபத்தி இறையனாரகப் பொருளுரையிலும் புகழப்பட்டுள் ளது. (மேற்கோட் பாடல்கள் 256, 297.)

உப்பும் மிகுதியாகக் கிடைக்கின்றன; பக்கத்துத் தீவுகளிற்கிடைக்கும் முத்துக்களும் இங்குக் கொண்டுவரப்படுகின்றன; இந்நாட்டில் வேறு விளைபொருள்கள் மிகுதியாக இல்லை. இங்கு வெப்பம் மிகுந்துள்ளது; இந்நாட்டுமக்கள் எல்லோரும் கறுத்தமேனியுடையவர்களாயும் உறுதியும் போர்வலிமையும் மிக்கவர்களாயும் இருக்கின்றனர்; இந்நாடு வாணிகத்தால் வளம்பெற்றுச் செல்வத்தாற் சிறந்துள்ளது' என்று பாண்டிநாட்டைப் பற்றித் தான் நேரில் அறிந்தவற்றை எழுதியுள்ளான். இதனால் மாறவர்மன் அரிகேசரியின் காலமாகிய ஏழாம்நூற்றாண்டின் இடைப்பகுதியிற் பாண்டிநாடு எத்தகைய நிலையிலிருந்தது என்பதை ஒருவாறு உணரலாம்.

இவ்வேந்தன் இரணிய கர்ப்பதானமும் துலாபாரதானமும் பலப்பல செய்து பெருமையுற்றனன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. துலாபாரதானஞ்செய்தல் கடைச்சங்க காலத்திலும் வழக்கத்திலிருந்ததென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றது. (சிலப்பதிகாரம்—நீர். 173, 176.) இவனைப்போலவே, கி. பி. பத்தாம் நூற்றாண்டினிறுதியிலும் பதினொன்றும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம் தமிழகத்திற் பேரரசனாக வாழ்ந்த முதலாம் இராசராசசோழன் தன் மனைவியுடன் இரணிய கர்ப்பாதனமும் துலாபாரதானமும் செய்தனன் என்று திருவிசலூர்க் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.

இனி, கடைச்சங்கநாளில் விளங்கிய தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியனே இவனது தந்தையாகிய செழியன்சேந்தன் எனவும், அந்நாளில் நிலவிய இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனே இவ்வரிகேசரி எனவும் ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர் வரைந்துள்ளார் (Indian Antiquary Vol. XL.) இஃது ஒரு சிறிதும் உண்மையன்று. கடைச்சங்ககாலத்துப் பாண்டியர்கள் எல்லோரும் தூய தமிழ்ப் பெயரை உடையவர்கள்; சங்ககாலத்திற்குப் பின்னர் அவர்களது பாண்டிநாடு களப்பிரராற் கைப்பற்றப்பட்டது. களப்பிரரது ஆட்சியொழிந்த பின்னர் அந்நாட்டின் அரசுரிமையை எய்தி ஆட்சிபுரிந்த இப்பாண்டியர் இருவரும் 'சேந்தன்' 'அரிகேசரி' என்ற வடமொழிப் பெயர்களையுடையவர்கள்; அன்றியும் வடநாட்டு ஆரியமன்னர்களைப்போல் 'வர்மன்' என்ற வடமொழிப்பட்டம் புனைந்துகொண்டவர்கள். சங்ககாலத்துப்பாண்டி மன்னர்கள் இப்பட்டம் புனைந்துகொண்டவர் அல்லர் என்பது பத்துப் பாட்டு, புறநானூறு, அகநானூறு முதலான நூல்களை ஓதி

உணர்ந்தவர்கள் நன்கறிந்ததொன்ரும். சங்ககாலத்துப் பாண்டியர்கள் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலும் அதற்கு முன்னரும் வாழ்ந்தவர்கள்; வடமொழிப் பெயர்களையும் பட்டங்களையும் உடையவர்களாகிய இப்பாண்டியர்கள் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் ஆட்சிபுரிந்தவர்கள். எனவே, தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்போரும் செழியன்சேந்தன், மாறவர்மன் அரிகேசரி என்போரும் ஒன்றுக்கொன்று சேய்மையுற்ற வெவ்வேறு காலங்களில் விளங்கிய பாண்டிமன்னர்கள் என்பது நன்கு வெளியாதல் காண்க.

கோச்சடையன் ரணதீரன்:—மாறவர்மன் அரிகேசரி என்பான் கி. பி. 670-ஆம் ஆண்டில் சிவபெருமான் திருவடிநீழல் எய்தவே, அவனது மகனுகிய கோச்சடையன் ரணதீரன் அரியணையேறிச் செங்கோல் கைக்கொண்டனன். இவனுக்குச் சில விருதுப்பெயர்கள் இருந்தன. அவை, தென்னவானவன், செம்பியன், சோழன், மதுரகருநாடகன், கொங்கர்கோமான் என்பன. இவற்ருல் இவ்வேந்தன் சோழநாட்டையும் கருநாடதேயத்தையும் கொங்குநாட்டையும் கைப்பற்றித் தனக்குத் திறைசெலுத்துமாறு செய்தவன் என்பது நன்கு அறியக்கிடக்கின்றது. அன்றியும், இவன் தென் திருவாங்கூரில் ஆண்ட ஆய்வேளைப் போரில்வென்றனன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. மேலைச்சளுக்கிய மன்னனுகிய முதல்விக்கிரமாதித்தனைத் திருச்சிராப்பள்ளிக்குஅருகிலுள்ள மருதூரிலும் மங்கலபுரத்திலும் போரில்வென்று புறங்காட்டி ஓடச்செய்த புகழுடையான் இவ்வேந்தன் என்பதும் வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது. முதல் விக்கிரமாதித்தன் இப்பாண்டியனேடு போர்புரிந்த செய்தி அவனது கேந்தூர்க் கல்வெட்டுக்களாலும் உறுதியெய்துகின்றது. (Epigraphia Indica Vol. IX, No. 29, P. 205.) ஒப்பற்ற வீரனுய் நிலவிய இவ்வரசன் கி. பி. 710-ஆம் ஆண்டில் விண்ணுலகடைந்தான்.

அரிகேசரி பராங்குச மாறவர்மன்:—இவன் கோச்சடையனது புதல்வன் ஆவன். இவன், தன் பாட்டன் பெயராகிய அரிகேசரி என்ற பெயருடையவன்; மாறவர்மன் என்ற பட்டம்புனைந்து அரசாண்டவன். இவனை முதலாம் இராசசிம்மன் எனவும் தேர்மாறன் எனவும் வழங்குவதுமுண்டு. இவன் கி. பி. 710 முதல் 765 வரை ஆட்சிபுரிந்தவன். இவன் காலத்தில் சோணுடு பல்லவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அந்நாளில் தொண்டைமண்டலத்திற்கும்

சோழமண்டலத்திற்கும் அரசனாக வீற்றிருந்து செங்கோல் செலுத்தியவன் நந்திவர்மப் பல்லவமல்லன் என்பான். மாறவர்மனுக்கும் இப்பல்லவமல்லனுக்கும் பல போர்கள் நிகழ்ந்தன. குழும்பூர், நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர், பெரியலூர் என்னும் ஊர்களில் நடைபெற்ற போர்களில் இவன் பல்லவ மன்னனையும் அவனது படைத் தலைவர்களையும் தோல்வியுறச் செய்தனன் என்று தெரிகின்றது. இவ்வூர்களுட் பல, புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ளன. எனவே, பல்லவர்கள் பாண்டிநாட்டையும் கைப்பற்றுவதற்குத் தெற்கே பெரும்படையுடன் செல்ல, இதனையுணர்ந்த இப்பாண்டியன் அப்பகைஞர்களைப் பாண்டிநாட்டின் வட எல்லையிலே தோற்றோடச் செய்தனன்போலும்.

நென்மேலி, மண்ணை முதலிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் பாண்டியனைப் பல்லவமல்லன் வென்றனன் என்று திருமங்கையாழ்வார், கச்சிப்பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் கூறியிருக்கின்றனர். இச்செய்தி, நந்திவர்மப்பல்லவமல்லனது உதயேந்திரஞ் செப்பேடுகளிலும் சொல்லப்பட்டுளது. (South Indian Inscriptions Vol. II, P. III, No. 74.) ஆகவே, சில இடங்களிற் பல்லவர்களும் வெற்றியடைந்திருக்கலாம்.

இவன் மழநாட்டையும் கொங்குநாட்டையும் கைப்பற்றி அந்நாட்டு மன்னர்களைத் தனக்குக் கப்பஞ்செலுத்திவருமாறுசெய்தனன் என்றும், மழவரையன்மகள் பூசுந்தரியை மணந்துகொண்டனன் என்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.

இவன் கொங்குநாட்டிற்குப் படையெடுத்துச்சென்றபோது திருப்பாண்டிக் கொடுமுடி என்னுந் திருப்பதிக்குப் போய் அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானது திருவடிகளை வணங்கிப் பொற்குவியலும் நவமணித்திரளும் மனமகிழ்ந்து கொடுத்தனன் என்பது வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியப்படுகின்றமையின் இவனது சிவபத்தியின்மாட்சி ஒருவாறு விளங்கும். இவன் தன் பாட்டனைப்போல் இரணியகர்ப்பதானங்களும் துலாபாரதானங்களும் செய்து புகழெய்தியவன். இறையனாரகப்பொருளுரை மேற்கோட் பாடல்களும் இவன் பெருமையையும் வீரத்தையும் நன்கு புலப்படுத்தாநிற்கும்.

நெடுஞ்சடையன் பராந்தகன் :—இவன் அரிகேசரி பராங்குசனது புதல்வன்; சடையவர்மன் என்ற பட்டம் புனைந்தவன்; தென்னவான

வன், சீவரன், சீமனோகரன், சினச்சோழன், புனப்பூழியன், விநய விச்ருதன், விக்கிரமபாரகன், வீரபுரோகன், மருத்பலன், மானிய சாசனன், மநாபமன், மர்த்திதவீரன், கிருபாலயன், கீதிகின்னரன், கலிப்பகை, கண்டகநிட்டுரன், பண்டிதவத்ஸலன், கார்முகபார்த்தன், பரிபூரணன், கூடநிர்ணயன் முதலான பல விருதுப் பெயர்களையும் உடையவன். இவற்றுள் இரண்டொழிய, எஞ்சியவையெல்லாம் வடமொழிப் பெயர்களாகும். தூய தமிழ்ப்பெயர்களையும் பட்டங்களையும் உடையவர்களாய் வாழ்ந்துவந்த தமிழ்வேந்தர்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இத்தகைய பட்டங்களைப் பெருவிருப்புடன் புனைந்துகொண்டது பெரியதோர் வியப்பேயாம்.

இவன், காவிரியின் தென்கரையிலுள்ள பெண்ணாகடத்து நிகழ்ந்தபோரில் பல்லவர்களை வென்றானென்றும், வேணாட்டரசனாகிய ஆய்வேளைப் போரிற் புறங்கண்டான் என்றும் வேள்விக்குடிச்செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவன் காவிரியின் வடகரையிலுள்ள ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் என்னும் இடங்களிற் கொங்குநாட்டு வேந்தனாகிய அதியனை வென்றசெய்தி, சென்னைப் பொருட்காட்சிச் சாலையிலுள்ள இவனது செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது. இவன் கொங்குநாட்டிலுள்ள காஞ்சிவாய்ப் பேரூர்க்குச் சென்று அங்குத் திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயில் எடுப்பித்தனன். இவன் ஆட்சிக்காலத்தில்தான் வைணவசமயாசாரியருள் ஒருவராகிய பெரியாழ்வார் வாழ்ந்தனர் என்ப. இவன் இப்பெரியாரிடத்தில் பேரன்பு பூண்டொழுகி வந்தனன். பாண்டியர் எல்லோரும் சைவ சமயத்தினர். இவன் ஒருவன் மாத்திரம் வைணவப்பற்று மிக்குடையவனாய்ப் பெரியாழ்வாரைத் தனக்கு ஞானாசாரியராகக் கொண்டனன். இவனைச் சீவரமங்கலத்துச் செப்பேடுகள் 'பரமவைஷ்ணவன்*' என்று புகழ்கின்றன; பெரியாழ்வாரும் திருமாலிருஞ்சோலைப் பாசுரங்களில் இவனைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

வேள்விக்குடிச் செப்பேடுகளும் சீவரமங்கலத்துச் செப்பேடுகளும் இவ்வரசன் பிறப்பித்தவைகளேயாம். இவை வரலாற்று ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படுங்கருவிகளாயுள்ளன. இவ்வேந்தனது ஆட்சிக்காலம் கி. பி. 765-க்கும் கி. பி. 790-க்கும் இடைப்பட்டதாகும்.

* The Madras Museum plates of Jatila Varman (செந்தமிழ்த் தொகுதி 4, பக்கம் 343.)

இரண்டாம் இராசசிம்மபாண்டியன் :—இவன் நெடுஞ்சடையன் பராந்தகனது புதல்வன். சின்னமனூர்ச் செப்பேடுகள் இவன் பெயரைமாத்திரம் கூறுகின்றனவேயன்றி இவனைப்பற்றிய செய்திகளுள் ஒன்றையும் உணர்த்தவில்லை. எனவே, இவன் ஆட்சிக்காலம் மிகச்சுருக்கமாயிருந்திருத்தல் வேண்டும். அன்றியும், இவன் காலத்தில் வரலாற்றிற் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் நிகழவில்லைபோலும். இவனது ஆட்சிக்காலம் கி. பி. 790-க்கும் கி. பி. 800-க்கும் இடைப்பட்டதாகும். இவன் மாறவர்மன் என்றபட்டம் புனைந்து அரசாண்டவன்.

வரகுணமகாராசன் :—இவன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியனது மகன் ஆவன்; சடையவர்மன் என்ற பட்டம் புனைந்துகொண்டு கி. பி. 800 முதல் கி. பி. 830 வரையிற் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்தவன். இவனைக் 'கொற்றவர்கள் தொழுகழற்காற் கோவரகுண மகாராசன்' என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் புகழ்கின்றன. இதன் உண்மையை ஈண்டு ஆராய்ந்து காண்போம்.

வரகுணமகாராசனது ஆறும் ஆண்டுக் கல்வெட்டு, சோழநாட்டிலுள்ள ஆடுதுறையிலும், எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு கும்பகோணத்திலும், பத்தாம் ஆண்டுக் கல்வெட்டு செந்தலையிலும், பதின்மூன்றும் ஆண்டுக் கல்வெட்டு திருவெள்ளறையிலும் இருத்தலால் சோழமண்டலம் முழுவதும் இவ்வேந்தனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டும். அன்றியும், கி. பி. 795 முதல் கி. பி. 830 வரையில் அரசாண்ட பல்லவவேந்தனாகிய தந்திவர்மனது கல்வெட்டுக்கள் சோழமண்டலத்திற் காணப்படவில்லை. எனவே, இப்பல்லவ மன்னனது ஆட்சியின் பிற்பகுதியில்தான் வரகுணமகாராசன் சோழமண்டலத்தின்மீது படையெடுத்து அதனைத் தன் ஆளுகைக்குள்ளாக்கி இருத்தல் வேண்டும்.

இனி, இவ்வேந்தனது பதினாறும் ஆண்டுக் கல்வெட்டொன்று திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அம்பாசமுத்திரத்திலிருக்கின்றது. அதில இம்மன்னன் தொண்டைமண்டலத்திற் பெண்ணையாற்றங் கரையிலுள்ள அரசூரில் வீற்றிருந்தபோது அச்சாசனம் அளிக்கப் பெற்றது என்று சொல்லப்பட்டுளது. எனவே, தொண்டைமண்டலத்தின் தென்பகுதியும் இவனது ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பது நன்கு வெளியாகின்றது. இவன்காலத்திருந்த பல்லவ வேந்தனாகிய தந்திவர்மன் என்பான் சோழமண்டலத்தையும் தொண்டைமண்டலத்தின் தென்பகுதியையும் இழந்து, எஞ்சியபகுதி

யையே ஆண்டுவந்தவனாதல் வேண்டும். ஆகவே, சோழமண்டலத்தையும் தொண்டைமண்டலத்தையும் பாண்டிமண்டலத்தோடு சேர்த்து ஒருங்கே ஆட்சிபுரிந்த பெருமையுடையவன் வரகுணமகாராசன் என்பது இனிது புலப்படுதல் காண்க.

இனி, இவ்வரசர்பெருமானது சிவபக்தியின் மாண்பு இத்தகையது என்று அளவிட்டுரைக்குந்தரத்ததன்று. முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள் தாம் இயற்றியுள்ள திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் இவனது சிவபக்தியின் பெருமையினை எடுத்துக்கூறிப் பெரிதுப் பாராட்டியுள்ளார். அவ்வடிகள் :—

‘வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக்கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்’

என்பவை.

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் நம் தமிழகத்தில் வாழ்ந்தவரும் சைவத்திருமுறைகளைத் தொகுத்தவருமாகிய நம்பியாண்டார்நம்பி என்னும் பெரியார் தாம் பாடிய கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில்,

'பொடியேர் தருமேனியஞ்கிப் பூசல் புகவடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு கோயிற் கருவியில்லா
ரடியே படவமை யுங்கணை யென்ற வரகுணன்றன்
முடியே தருகழ லம்பலத் தாடிதன் மொய்கழலே'

என்று இவன் சிவபெருமான்பால் வைத்திருந்த பேரன்பினைப் புகழ்ந்து கூறியுள்ளார். இதனாலும் இவனது சிவபத்தியின் மாட்சியை நன்குணரலாம்.

சீமாறன் பரசக்கர கோலாகலன்:—வரகுணமகாராசன் சிவபெருமான் திருவடிநீழல் எய்தியபின்னர் அவனது புதல்வனாகிய இவ்வேந்தன் கி.பி. 830-ஆம் ஆண்டில் முடிசூட்டப்பெற்று ஆட்சிபுரியத்தொடங்கினான். இவனுக்கு 'ஏகவீரன்' 'சீவல்லபன்' என்ற புனைபெயர்களும் உண்டு. இவன் மாறவர்மன் என்ற பட்டம்பெற்றவன். இவன் சேரர், பல்லவர், சிங்களவர் முதலானவரோடு புரிந்த போர்கள் பலவாகும். இவன் குண்ணூர், சிங்களம், விழிஞம் ஆகிய இடங்களிற் போர்நிகழ்த்தி வாகைசூடியதோடு குடமூக்கில் வந்து எதிர்த்த கங்கர், பல்லவர், சோழர், காலிங்கர், மாகதர் முதலான அரசர்களைவென்று ஆற்றலோடு விளங்கினான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. இங்குக் குறித்துள்ள இடங்களுள் விழிஞம்என்பது திருவநந்தபுரத்திற்குத் தெற்கே பத்துமைல்தூரத்தில் மேலைக்கடற்கரையிலுள்ளதோர் துறைமுகப்பட்டினமாகும். (South Indian Inscriptions Vol. III, Page 13.) ஆகவே, விழிஞத்துப் போரில் இவ்வேந்தன் சேரரை வென்றிருத்தல் வேண்டும். இவனால் வென்றடக்கப் பெற்ற சேரமன்னன் யாவன் என்பது தற்காலத்திற் புலப்படவில்லை. குண்ணூரில் யாரோடு இவன் போர் புரிந்தனன் என்பதும் தெரியவில்லை. குடமூக்கு என்பது இந்நாளிற் கும்பகோணம் என்று வழங்கும் நகரமாகும். கும்பகோணத்திலுள்ள கோயில்களிற் காணப்படும் கல்வெட்டுக்கள் இந்நகரைக் குடமூக்கு என்றே கூறுவதோடு சைவசமயாசாரியர்களது திருப்பாடல்களும் அங்ஙனமே உணர்த்துகின்றன. மாறவர்மன் பரசக்கரகோலாகலன், தெள்ளாறெறிந்த நந்திவர்மனை இக்குடமூக்குப் போரில் கி. பி. 854-ஆம் ஆண்டிற் புறங்காட்டி ஓடச்செய்து தன் பெருஞ்சினத்தை ஒருவாறு தணித்துக்கொண்டனன். எனவே, குடமூக்குப் போர் இம்மாறவர்மனுக்கும் பல்லவர்க்கும் நிகழ்ந்த பெரும் போரேயாகும். இச்செய்தி நிருபதுங்கவர்மன் என்ற பல்லவ அரசனது வாகூர்ச்செப்பேடுகளிலும் சொல்லப்பட்டுள்ளது. (South

Indian Inscriptions Vol. II, Part V.) ஈழநாட்டில் முதலாவது சேனன் ஆட்சிபுரிந்துகொண்டிருக்கும் நாளில் மாறவர்மன் அந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்று பல நகரங்களைக் கொள்ளையிட்டுப் புத்தவிகாரங்களிலுள்ள பொற்படிமங்களையும் விலையுயர்ந்த பிறபொருள்களையும் கவர்ந்துவந்தனன் என்றும் அதனால் சிங்களதேயம் தன் செல்வமெல்லாம் இழந்து சிறுமையுற்றதென்றும் மகாவம்சம் என்னும் இலங்கைவரலாறு கூறுகின்றது. இதனால் மாறவர்மன் சிங்களத்தை வென்றானென்று சின்னமனூர்ச் செப்பேடுகள் உணர்த்துவது உண்மையாதல் காண்க.

இவன் இங்ஙனம் தன் புகழையும் வெற்றியையும் யாண்டும் பரப்பி வாழ்ந்துவரும் நாளில் இவனது தாயத்தினனாகிய மாய பாண்டியன் என்பான் இவனுடன் பகைத்து இலங்கைவேந்தனாகிய இரண்டாம் சேனனுடன் நட்புரிமை பூண்டு ஒழுகிவந்தனன். இவ்விருவரும் மாறவர்மனை எதிர்க்கும் ஆற்றலின்றிப் பாண்டியர் குடிக்கு வழிவழிப் பகைமைபூண்டு அன்னோரைவென்று அழித்தற்குக் காலங்கருதிக்கொண்டிருந்த பல்லவ அரசர்களுள் ஒருவனாகிய நிருபதுங்கவர்மனது உதவியை நாடினர். அவ்வேந்தனும் தன் கருத்தை நிறைவேற்றுவதற்கு அதுவே தக்ககாலமெனக் கருதிப் பாண்டிநாட்டின்மீது படையெடுத்தற்குத் தானும் அன்னோர்க்கு உதவிபுரிவதாக உறுதி கூறினன். இங்ஙனம் பல்லவர்களும் சிங்களவர்களும் ஒருங்குசேர்ந்து பெரும்படையைத் திரட்டிக்கொண்டு கி. பி. 862-ஆம் ஆண்டில் பாண்டிநாட்டின்மீது சென்றனர். இதனை உணர்ந்த மாறவர்மன் பகைஞரைத் தன்னாட்டிற் புகாதவாறு இடையில் தடுத்துப் பெரும்போர் புரிந்தனன். அரிசிலாற்றங்கரையில் நிகழ்ந்த போரிற் பல்லவமன்னனாகிய நிருபதுங்கனும் சிங்களவர்களும் வெற்றிபெய்தவே, மாறவர்மன் தோல்வியுற்றனன். இப்போர்நிகழ்ச்சி, நிருபதுங்கவர்மனது வாகூர்ச்செப்பேடுகளிலும் கூறப்பட்டுளது. இப்பல்லவ வேந்தனது கல்வெட்டுக்கள் சோழமண்டலத்திலுள்ள கண்டியூர், கோவிலடி, லால்குடி முதலான ஊர்களில் இதுமுதற் காணப்படுதலால் இவன் பாண்டியர்களிடமிருந்து சோழமண்டலத்தைத் திரும்பக் கைப்பற்றிக்கொண்டனன் என்பது இனிது புலப்படுகின்றது. கி. பி. 862-ஆம் ஆண்டில் இவனது முதல் மகனாகிய வரகுணவர்மன் பாண்டிநாட்டிற் பட்டம் எய்தியுள்ளமையின் இவனது தந்தையாகிய மாறவர்மன் அவ்

வாண்டில் இறந்திருத்தல்வேண்டும். மாறவர்மனுக்கு வரகுணவர்மன், பராந்தகன் என்ற இருமக்கள் இருந்தனர்.

வரகுணவர்மன் :—மாறவர்மனது முதல்மகனாகிய இவ்வேந்தன் கி. பி. 862-ஆம் ஆண்டில் முடிசூட்டப்பெற்றான் என்று மதுரை ஜில்லாவில் ஐவர்மலையிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. இவன் சடையவர்மன் என்னும் பட்டத்துடன் அரசாண்ட வேந்தனாவன். இவனைக் 'குரைகழற்கா லரைசிறைஞ்சக் குவலயதலந் தன தாக்கின - வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் வரகுணவர்மன்' என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. பாண்டியர்கட்கும் பல்லவர்கட்கும் நடைபெற்றுவந்த போர் இவன் காலத்தேதான் ஒருவாறு முடிவெய்தியது எனலாம்.

பழைய சோழமன்னர்களின் வழியினனும் விசயாலயன் மகனுமாகிய முதலாம் ஆதித்தசோழன் என்பான் பல்லவர்கள் கைப்பற்றி ஆண்டுவந்த சோழமண்டலத்தைத் திரும்பத் தான் கைப்பற்ற எண்ணித் தக்க காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்துமைல் தூரத்தில் மண்ணியாற்றங்கரையிலுள்ள திருப்புறம்பியம் என்னுமிடத்தில் வரகுண பாண்டியனுக்கும் பல்லவர்கட்கும் கி. பி. 880-ஆம் ஆண்டிற்கணித்தாக ஒரு பெரும்போர் நடைபெற்றது. இப்போரிற் பல்லவர்கட்குத் துணையாக வந்திருந்த கங்க அரசனாகிய முதலாம் பிருதிவிபதி என்பான் பாண்டியன் வரகுணவர்மனாற் கொல்லப்பட்டான்.* பல்லவ வேந்தனாகிய அபராஜிதவர்மன் வெற்றிபெற்றும் எக்காரணம் பற்றியோ தொண்டைமண்டலத்திற்கு ஓடிவிட்டான். இச்சமயத்தில் தான் முதலாம் ஆதித்தசோழன் தஞ்சைமாநகரில் முடிசூட்டப்பெற்றுச் சோழமண்டலம் முழுவதையும் ஆட்சிபுரியும் பெருமையை எய்தினான். பல்லவர்களது ஆட்சி ஒழிதற்கும் சோழர்களது ஆட்சி மீண்டும் சோழமண்டலத்தில் நிலைபெறுதற்கும் காரணமாயிருந்த இத்திருப்புறம்பியப் போர், தமிழகவரலாற்றிற் குறித்தற்கு உரிய ஒருபெரிய நிகழ்ச்சியாகும். இப்போரில் இறந்த முதலாம் பிருதிவிபதியின் கோயில் ஒன்றும் உதிரம்படிந்த தோப்பு ஒன்றும் திருப்புறம்பியத்தில் இன்றும் உள்ளன. இவை முற்காலத்தில் அங்கு நிகழ்ந்த பெரும்போரை உணர்த்தற்குரிய அடையாளங்கள் ஆகும்.

---

* South Indian Inscriptions Vol. II ; No. 76.

வரகுணவர்மன் காலத்தில் நிகழ்ந்த பிறசெய்திகளுள் ஒன்றும் தற்காலத்திற் புலப்படவில்லை; அன்றியும், இவன் எத்துணை ஆண்டுகள் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்தனன் என்பதும் இப்போது அறியக்கூடவில்லை; இவனுக்குப் பின்னர் இவனது இளவலாகிய பராந்தகபாண்டியன் பட்டத்திற்கு வந்தனன் என்பதுமாத்திரம் தெரிகிறது.*

பராந்தகபாண்டியன் :—இவன் மாறவர்மன் பரசக்கரகோலாகலனது இரண்டாம் புதல்வனுவன். இவனுடைய தமையனுகிய வரகுணவர்மன் இறந்தபின்னர், இவன் அரியணையேறினுன். இவன் அரியணையேறியது கி. பி. 880-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிகழ்ந்திருத்தல்வேண்டும். அவ்வாண்டை இப்போது அறிந்துகூறுதற்கு இயலவில்லை. இவன், தன் தமையனைப்போல் சடையவர்மன் என்ற பட்டமுடையவனுய் வாழ்ந்துவந்தனன். இவன் சோழமண்டலத்திலுள்ள இடவை என்னும் நகர்மீது படையெடுத்துச் சென்றனன் என்று திண்டுக்கல் தாலூகாவிலுள்ள இராமநாதபுரக் கல்வெட்டு ஒன்று உணர்த்துகின்றது. இடவை என்பது சோழமண்டலத்தில் இராசேந்திரசிங்கவளநாட்டில் மண்ணிநாட்டில் உள்ளது என்று தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருவிசலூர், வேப்பத்தூர், திரைலோக்கியமாதேவிச் சதுர்வேதிமங்கலம், திருக்குடித்திட்டை, இடையார்நல்லூர் முதலான ஊர்கள் இம்மண்ணிநாட்டில் உள்ளனவே ஆகும். எனவே, இவற்றிற்கருகில்தான் இடவையுமிருத்தல்வேண்டும். இடவை நகரின்மீது பராந்தகபாண்டியன் படையெடுத்துச் சென்றமைக்குக் காரணம் புலப்படவில்லை.

இவ்வேந்தன் கொங்கர்களைப் போரில்வென்றும், பெண்ணுகடநகரை அழித்தும் பல தேவதானங்களும் பிரமதேயங்களும் விட்டும் புகழ்பெற்றனன் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவனுக்கு வீரநாராயணன் என்றபெயரும் உண்டு. இவனுடைய பட்டத்தரசி வானவன்மாதேவி என்பாள். இவ்விருவருக்கும் பிறந்த புதல்வன் மூன்றும் இராசசிம்மபாண்டியனுவன். பராந்தகபாண்டியன் கி. பி. 900-க்கு அணித்தாக இறந்தனன். இவனைப்பற்றிய பிறசெய்திகள் தற்காலத்திற் புலப்படவில்லை.

---

* சின்னமனூர்ச் செப்பேடுகள், (Annual Report on South Indian Epigraphy for 1907.)

ஆறும் அதிகாரம்.

கி. பி. 900 முதல் கி. பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்.

மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் :—இவ்வேந்தன் சடையவர்மன் பராந்தகனுடைய புதல்வன். இவன்தாய் வானவன்மாதேவி என்பாள். இவன் கி. பி. 900-த்தில் பட்டம் எய்தினன் என்று தெரிகிறது. சின்னமனூர்ச்செப்பேடுகள் இம்மன்னனது பதினாறும் ஆண்டில்அளிக்கப்பெற்றவை.* இவை பாண்டியர்வரலாற்றை ஆராய்வார்க்குப் பெரிதும் பயன்படுவனவாகும். தற்காலத்திற் சின்னமனூர் என்று வழங்கும் நற்செய்கைப்புத்தூர்க்கு மந்தரகௌரவமங்கலம் எனப்பெயரிட்டுஅதனை இவ்வரசன் பிரமதேயமாக அளித்த செய்தியை இச்செப்பேடுகள் உணர்த்துகின்றன. அன்றியும், இவன் உலப்பிலிமங்கலத்தில் எதிர்த்த பகைஞர்களைவென்றமையும், கொடும்பாளூர் மன்னனது பெரும்படையைப் புறங்காட்டி ஓடச்செய்தமையும், வஞ்சிமாநகரிற் பெரும்போர் புரிந்தமையும் தஞ்சைமன்னனை நாவற்பதியில் தோல்வியுறச் செய்தமையும் இச்செப்பேடுகளால் நன்கு அறியப்படுகின்றன. இவன் 'எண்ணிறந்த பிரமதேயமும், எண்ணிறந்த தேவதானமும், எண்ணிறந்த பள்ளிச்சந்தமும், எத்திசையும் இனிதியற்றிப்' புகழ்பெற்றனன் என்பதும், இராசசிகாமணி, சீகாந்தன், மந்தர கௌரவமேரு முதலான பட்டங்களையுடையவனாயிருந்தனன் என்பதும் ஈண்டு அறிந்துகொள்ளுதற்குரியனவாகும்.

இனி, சோழமண்டலத்தில் கி. பி. 907-ல் முடிசூடிக்கொண்ட முதற்பராந்தகசோழன், அவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டில், 'மதுரைகொண்ட கோப்பரகேசரி' என்று கல்வெட்டுக்களிற் குறிக்கப்பெற்றுள்ளான். இதனால் இம்முதற்பராந்தகசோழன் கி.பி. 910-ல் மூன்றாம் இராசசிம்மபாண்டியனோடு போர்புரிந்து அவனை வென்று இருக்கவேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. தோல்வியுற்ற இராசசிம்மபாண்டியன் இலங்கை மன்னனாகிய ஐந்தாம் காசிபனைத் தனக்குத் துணைப்படையனுப்புமாறு கேட்டுக்கொண்டனன். அவ்வேந்தனும் பாண்டியனது வேண்டுகோட்கிணங்கித் தன் படைத்தலைவனிடம் சிறந்த யானைகளும், குதிரைகளும், வீரர்களும் அடங்கிய பெரும்படையொன்றை அனுப்பினான். இலங்கைப்படையும் பாண்டிப்படையும் ஒருங்குசேர்ந்து முதற் பராந்தகசோழனோடு போர்புரிதற்குப் புறப்பட்டன. வேளூர் என்னுமிடத்திற் பெரும்

---

* South Indian Inscriptions Vol. III, Part IV, Ins. No. 206.

போர் நடைபெற்றது.* அவ்விருபடைகளும் பராந்தகன் படையுடன் போர்புரியும் ஆற்றலின்றிப் புறங்காட்டியோடத் தலைப்பட்டன. இராசசிம்மன் இம்முறையும் தோல்வியுற்றான். எனவே பாண்டி நாடு பராந்தக சோழனது ஆட்சிக்குள்ளாயிற்று. இது நிகழ்ந்தது கி.பி. 919-ஆம் ஆண்டாகும். இச்செய்திகளுள் சில, இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரச் செப்பேட்டிலும் சொல்லப்பட்டுள்ளன.†

தனக்குரிய நாட்டை இழந்த இராசசிம்மபாண்டியன் சிங்களத்திற்குச் சென்று அந்நாட்டரசனது உதவி பெறுமாறு ஆங்குத் தங்கியிருந்தனன்; தன் நாட்டைப் பெறுவதற்கு அவ்வேந்தன் உதவாமைகண்டு, அங்குத் தங்கியிருப்பதால் ஒரு பயனும் இல்லையென்பதை நன்குணர்ந்து, தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்துள்ள சுந்தரமுடியை அம்மன்னனிடத்தில் வைத்துவிட்டு, தன் தாய் வானவன்மாதேவியின் பிறந்தகமாகியகேரளநாட்டிற்குச்சென்று அங்கு வசித்துவந்தான். பின்னர் இவனைப்பற்றிய செய்திகள் புலப்படவில்லை. ஆகவே, பாண்டியரது ஆட்சி இம்மன்னன் காலத்தே தான் மிகவும் தாழ்ந்த நிலையையடைந்து வீழ்ச்சியெய்திற்று; பாண்டிநாடும் சோழரது ஆளுகைக்குள்ளாயிற்று. திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் முதலான ஜில்லாக்களிலும் திருவாங்கூர் இராச்சியத்தின் சிலபகுதிகளிலும் காணப்படும் முதற் பராந்தக சோழன் கல்வெட்டுக்கள் இவ்வுண்மைகளை நன்கு விளக்குங் கருவிகளாக உள்ளன.

வீரபாண்டியன்:—இவ்வேந்தன் இராசசிம்மபாண்டியன் புதல்வன் என்று மதுரைஜில்லா திருப்புடைமருதூரிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.‡ இவன் கல்வெட்டுக்கள் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும் திருவாங்கூர் இராச்சியத்தின் தென்பகுதியிலுமுள்ளன. அன்றியும், இவன் ஆட்சியின் ஒன்பது பத்தாம் ஆண்டுகளின் கல்வெட்டுக்கள் மதுரைஜில்லா திருமங்கலந்தாலூகாவிலுள்ள கீழமாத்தூர்க் கோயிலிலும் காணப்படுகின்றன.§ இவற்றால், இவன் தனக்குரிய பாண்டிமண்டலத்தைச் சோழமன்னர்களிடமிருந்து கைப்பற்றி ஆட்சிபுரிந்திருக்கவேண்டும்

---

* S. I. I. Vol. III, Inscription No. 99. இதிற் குறிக்கப்பெற்றுள்ள வேளூர் எவ்விடத்தில் இருக்கின்றது என்பது தெரியவில்லை.

† South Indian Inscriptions Vol. III, Inscription No. 65.

‡ Inscription No. 128 of 1905.

§ Inscriptions 624 and 625 of 1926.

என்பது வெளியாகின்றது. அவன் இங்ஙனம் பாண்டிமண்டலத்தைக் கைப்பற்றியது முதற்பராந்தகசோழனது ஆட்சியின் இறுதிக் காலத்திலாதல் அவன் மகனாகிய கண்டராதித்த சோழன் ஆட்சியின் தொடக்கத்திலாதல் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அந்நாட்களில் இராட்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணதேவன் சோழநாட்டின்மீது படையெடுத்துவந்து உள்நாட்டிற் குழப்பம் உண்டு பண்ணியமையால், சோழமன்னர்கள் தம் ஆளுகையின்கீழ் வைத்துக் கொண்டிருந்த பாண்டிமண்டலத்தைப் பாதுகாக்கமுடியாத நிலையில் இருந்தனர். காலங்கருதிக்கொண்டிருந்த வீரபாண்டியனும் முடிசூடிக்கொண்டு பாண்டிநாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். இதற்கேற்ப, முதற்பராந்தக சோழனுக்குப் பின்னர் அரசாண்ட கண்டராதித்தன், அரிஞ்சயன் என்ற இரண்டு சோழமன்னர் கல்வெட்டுக்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலான ஜில்லாக்களிற் காணப்படவில்லை. ஆனால், வீரபாண்டியன் கல்வெட்டுக்கள் மாத்திரம் அவ்விடங்களிலுள்ளன என்பது முன்னரே விளக்கப்பட்டது. எனவே, வீரபாண்டியன் பாண்டிநாட்டில் முடிமன்னனாக வீற்றிருந்து சோழமன்னர்க்குத் திறைசெலுத்தாது அதனையாட்சிபுரிந்து வந்தனனென்பது இனிதுபெறப்படுகிறது.

இனி, வீரபாண்டியன் கல்வெட்டுக்களுள் பல, 'சோழன் தலை கொண்ட கோவீரபாண்டியற்கு ஆண்டு'* என்று தொடங்குகின்றமையின் ஒரு சோழமன்னனை இவன் போரிற் கொன்றிருத்தல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. முதற் பராந்தகசோழனுக்குப் பிறகு அரசாண்ட சோழமன்னருள் ஒருவனும் அவனது மகனுமாகிய அரிஞ்சயன் என்பான், தன்னாட்சியின் தொடக்கத்திற் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அங்கு வீரபாண்டியனாற் கொல்லப்பட்டிருத்தல்வேண்டும் என்பது உய்த்துணரப்படுகின்றது. ஆனால், வீரபாண்டியனாற் கொல்லப்பட்டவன் இவ்வரிஞ்சயன் புதல்வனும் முதல் இராசராச சோழன் தந்தையுமாகிய சுந்தர சோழனாயிருத்தல் வேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இன்னோர்கொள்கைக்குச் சில சான்றுகள் முரணாக உள்ளன. சுந்தரசோழனுக்குப் 'பொன்மாளிகைத் துஞ்சினதேவர்'† என்னும் பெயருண்டு என்பது சில கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. பொன்மாளிகையென்பது சோழமன்னரது ஆட்சிக்காலங்களிற்

---

* Travancore Archaeological Series Vol. III, Part I.
† South Indian Inscriptions Vol. II, Ins. No. 6, pp. 72 & 74.

காஞ்சிமாநகரிலிருந்த அரண்மனைகளில் ஒன்று.* ஆகவே, இச்சுந்தர சோழன் காஞ்சிமாநகரிலிருந்தமேோர் அரண்மனையில் இறந்திருக்கவேண்டும்; வீரபாண்டியனாற் கொல்லப்பட்டிருத்தற்கு இடம் இல்லை.

அன்றியும், கி. பி. 964-ல் சுந்தரசோழன் சேவூர் என்னுமிடத்தில் வீரபாண்டியனைப் போரில் வென்றானென்று தெரிகிறது.† தஞ்சைஜில்லாவிலுள்ள சில கல்வெட்டுக்கள், இச்சோழமன்னனைப் 'பாண்டியனைச் சுரம் இறக்கினபெருமாள்' என்று குறிப்பதும் இவன் வீரபாண்டியனோடு போர்புரிந்து அவனை வென்ற செய்தியையே வலியுறுத்துகின்றது. எனவே, வீரபாண்டியன் சுந்தர சோழனைப் போரிற் கொன்றனன் என்று கூறுவது எவ்வாற்றானும் பொருத்தமுடையதன்று.

இனி, அரிஞ்சயனது கல்வெட்டுக்கள் சோழநாட்டில் யாண்டுங் காணப்படாமையே, அவன் முடிசூடியசிலதிங்களில் இறந்திருத்தல்வேண்டுமென்பதை உணர்த்துகின்றது. இவ்வரிஞ்சயனது பெயரனாகிய இராசராசசோழன் மேற்பாடி என்னும் ஊரில் 'அரிஞ்சயேச்சுரம்'‡ என்ற ஒரு கோயில் எடுப்பித்து அதற்கு நிபந்தங்களும் விட்டிருப்பது இவன் போரில் உயிர்துறந்தகாரணம் பற்றியே போலும். இது, தற்காலத்தில் சோழேச்சுரம் என்று வழங்குகின்றது. ஆகவே, வீரபாண்டியனாற் கொல்லப்பட்ட சோழமன்னன் முதலிராசராசசோழன்பாட்டனாகிய அரிஞ்சயனேயாதல்வேண்டும்.

இனி, சுந்தரசோழன் முதல்மகனும் அரிஞ்சயன்பெயரனுமாகிய ஆதித்தகரிகாலன் என்பான், 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்'§ என்று பல கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டிருத்தலால் இவன் வீரபாண்டியனைப் போரிற் கொன்றிருத்தல் வேண்டுமென்பது வெளியாகின்றது. அரிஞ்சயன்மனைவி, கொடும்பாளூர்க் குறுநிலமன்னனாகிய தென்னவன் இளங்கோவேள் மகள் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது.‖ எனவே, வீரபாண்டியன் அரிஞ்சயனைக் கொன்றகாரணம்பற்றி ஆதித்தகரிகாலனும் கொடும்பாளூர்மன்னனும் ஒருங்குசேர்ந்து வீரபாண்டியனோடு போர்புரிந்து

---

* S. I. I. Vol. III, Ins. No. 142.

† Leidan Grants of Rajaraja Chola I.

‡ S. I. I. Vol. III, Inscriptions 15, 16 & 17.

§ S. I. I. Vol. III, Ins. No. 14.

‖ S. I. I. Vol. III, Ins. No. 96.

அவனைக்கொன்றிருத்தல்வேண்டுமென்பது திண்ணம். இந்நிகழ்ச்சி ஆதித்தகரிகாலனது இரண்டாம்ஆண்டுக் கல்வெட்டிற் குறிக்கப்பெற்றிருத்தலால் வீரபாண்டியன் கி. பி. 972-க்கு முன்னரே இறந்தனன்போலும்.

இவ்வீரபாண்டியற்குப் பின்னர், பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கம்வரையில் ஆட்சிபுரிந்த பாண்டியர்கள் சோழர்களுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர்களாக இருந்தமையின் அவர்கள் வரலாற்றை அறிந்துகொள்ளுதற்குரிய கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிற் கிடைக்கவில்லை. முதல் இராசராசசோழன், முதல் இராசாதிராசசோழன் முதலான சோழமன்னர்கள் கல்வெட்டுக்களில் அவர்களால் வென்றடக்கப்பட்டவர்களாகக் குறிக்கப்பெற்றுள்ள பாண்டியர்பெயர்கள்மாத்திரம் காணப்படுகின்றன. அத்தகைய பாண்டியர்வரலாற்றையும் அக் கல்வெட்டுக்களின் துணைகொண்டு தொடர்பாக அறிய இயலவில்லை. இதுகாறும் ஆராய்ந்துகண்ட சில செய்திகளே அடியில் எழுதப்பெறுவன.

அமரபுயங்கன்:—இப்பாண்டியன் முதல் இராசராசசோழனால் வென்றடக்கப்பெற்றவன் என்று திருவாலங்காட்டுச்செப்பேடு கூறுகின்றது.* இவ்வேந்தன் யாருடையபுதல்வன் என்பதும் எப்போது பட்டத்திற்குவந்தனன் என்பதும் புலப்படவில்லை. முதல் இராசராசன் கி. பி. 995-ல் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது பாண்டியனும் சேரனும் ஒருங்குசேர்ந்து அவனை எதிர்த்தனர். அவன் அவ்விருவரையும் வென்று நாட்டைவிட்டு ஓடுமாறுசெய்ததோடமையாது, பாண்டிநாட்டையும் சேரநாட்டையும் கைப்பற்றி, அவற்றிற்கு 'இராசராசமண்டலம்' என்று பெயரிட்டுத் தன் ஆட்சிக்குள்ளாக்கினான். அதுமுதல், இராசராசனுக்குப் 'பாண்டிகுலாசனி' என்ற பெயரும் வழங்குவதாயிற்று. இராசராசன்கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலும் உள்ளன.† இங்ஙனம் இராசராசசோழனாற் பாண்டிநாட்டைவிட்டு ஓடுமாறு துரத்தப்பெற்றவன் இவ்வமரபுயங்கனேபோலும்.

முதல் இராசராசசோழன்மகனாகிய முதல் இராசேந்திரசோழன் தன் ஆட்சியின் தொடக்கத்தில் தன்புதல்வர்களுள் ஒருவனுக்குச் 'சோழபாண்டியன்' என்ற பட்டமளித்துப் பாண்டி

* S. I. I. Vol. III, No. 205.

† Inscriptions Nos. 2, 6, 7, 8, and 84 of 1927; Travancore Archaelogical Series Vol. 1, 2, & 3.

னாடாகிய இராசராசமண்டலத்திற்கு அரசப்பிரதிநிதியாக மதுரையில் வீற்றிருந்து ஆண்டுவருமாறு அனுப்பினன்.* இவன் இங்ஙனம் செய்தமைக்குக்காரணம் தோல்வியுற்ற பாண்டியர் சிறிது வலிமையெய்தியவுடன் சோழர்க்குத் திறைசெலுத்தாது முரண்பட்டுவந்தமையேயாம். சோழமன்னரது பிரதிநிதிகளாகச் 'சோழ பாண்டியர்' என்ற பட்டத்தோடு மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்தோர், முதல் இராசேந்திரசோழன்மகன் சுந்தரசோழபாண்டியன், விக்கிரமசோழபாண்டியன், பராக்கிரமசோழபாண்டியன் என்போர்.† இவர்கள் கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலும் காணப்படுகின்றன. எனவே, சோழபாண்டியரது ஆளுகை சேர நாட்டிலும் நிலைபெற்றிருந்ததென்பது நன்கு துணியப்படும்.

மாறபரணன், வீரகேரளபாண்டியன், சுந்தரபாண்டியன், விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன்:—இவர்கள், முதல் இராசாதிராச சோழன்காலத்திற் பாண்டிநாட்டிலிருந்த மன்னர்களாவர். சோழர்களால் அனுப்பப்பெற்ற அரசப்பிரதிநிதிகளுக்கு அடங்காது உள்நாட்டிற் கலகம்விளைத்தகாரணம்பற்றி இவர்களோடு இராசாதிராசசோழன் போர்நிகழ்த்துவது இன்றியமையாததாயிற்று. அப்போரில் மானபரணபாண்டியனும் வீரகேரளபாண்டியனும் கொல்லப்பட்டனர்; சுந்தரபாண்டியன் தோற்றோடி முல்லையூரில் ஒளிந்துகொண்டான்; விக்கிரமபாண்டியன் ஈழமண்டலத்திற்கு ஓடிவிட்டான். வீரபாண்டியன் என்பான் இராசாதிராசசோழனால் கி. பி. 1048-ல் கொல்லப்பட்டானென்று கோலார்ஜில்லாவில் மிண்டிக்கல் என்னுமிடத்திலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.‡ இச்செய்தி இராசாதிராசசோழனது திருக்களர்ச் செப்பேட்டிலும் குறிக்கப்பட்டுளது.§ இங்குக் குறிக்கப்பெற்ற பாண்டியர் ஐவர் வரலாற்றையும் உணர்த்தக்கூடிய கருவிகள் கிடைக்கவில்லை.

சோழநாட்டில் வீரராசேந்திரசோழன் இறந்தபின்னர் அதிராசேந்திரன் ஆட்சிபுரியும் நாட்களில், உள்நாட்டிற் பெருங்கலகம் உண்டாயிற்று. அதில் அதிராசேந்திரன் கொல்லப்பட்டான். அக்காலத்திற் சோழமண்டலம் பெருங்குழப்பத்திற்குள்ளாகி அரச

* South Indian Inscriptions Vol. III, No. 205.
† Annual Report on Epigraphy for 1916—1917.
‡ Epigraphia Indica. Vol. IV, No. 31.
§ South Indian Inscriptions Vol. III, No. 208.

னின்றி அல்லலுற்றிருந்தது. எனவே, சோழமன்னர்களின் பிரதிநிதியாகப் பாண்டிமண்டலத்தில் ஆண்டுவந்த சோழபாண்டியரது ஆட்சியும் அங்கு நடைபெறுமல் ஒழிந்தது. இச்சமயத்தில் பாண்டியர் ஐவரும் இழந்தநாட்டைக் கைப்பற்றி அமைதியுடன் கி.பி. 1084 வரை ஆண்டுவந்தனர்.

பிறகு, சோழமண்டலத்தின் அரசுரிமையை எய்தி அதன் முடிமன்னனுக வீற்றிருந்து ஆட்சிபுரியும் பெருமையடைந்த முதற் குலோத்துங்கசோழன் கி. பி. 1084ல் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அங்கு ஆண்டுகொண்டிருந்த பாண்டியர் ஐவரையும் போரில்வென்று அந்நாட்டைக் கைப்பற்றி அங்கு வெற்றித் தூண்களும் நிறுவினுன். இச்செய்தி முதற்குலோத்துங்கசோழன் * மெய்க்கீர்த்தியில் நன்குவிளக்கப்பட்டிருப்பதோடு அவன்மீது சயங்கொண்டாரால் பாடப்பெற்றுள்ள கலிங்கத்துப்பரணியிலும் † கூறப்பட்டுளது. இங்ஙனம் முதற்குலோத்துங்கசோழன்பால் தோல்வியுற்ற பாண்டியர் ஐவரும் யாவர் என்பது தற்காலத்திற் புலப்படவில்லை. ஆயினும், சடையவர்மன் சீவல்லபன் என்பான் குலோத்துங்கன்காலத்திலிருந்த பாண்டியர் ஐவருள் ஒருவனுக இருத்தல்கூடுமென்று ஆராய்ச்சிவல்லார் கருதுகின்றனர். ‡

மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி பராக்கிரமபாண்டியன்:— இவன் குலோத்துங்கன்காலத்திலிருந்த பாண்டியருள் ஒருவன் என்று தெரிகிறது. இவனைப்பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

சடையவர்மன் பராந்தகபாண்டியன்:—இவன் குலோத்துங்க சோழன் இறுதிக்காலத்திலும் விக்கிரமசோழன் ஆளுகையின் முற்பகுதியிலும் பாண்டிநாட்டிலிருந்தவன். இவன் பராக்கிரமனுக்கு எம்முறையினன் என்பது இப்போது தெரியவில்லை. இவனுடைய மெய்க்கீர்த்தி குமரிமுனைக்கருகிலுள்ள பகவதிகோயிலில் உளது.

---

* 'தன்பெருஞ் சேனை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருதப் போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து'

(குலோத்துங்கன் I. மெய்க்கீர்த்தி)

† 'விட்ட தண்டெழ மீனவர் ஐவருங்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ'

(கலிங்கத்துப்பரணி—368.)

‡ The Pandyan Kingdom by Mr. K. A. Neelakanta Sastri.

அம்மெய்க்கீர்த்தியால் இவன் சேரமன்னனை வென்று திறைகொண்டதும், காந்தளூர்ச்சாலையிற் கலமறுத்ததும், விழிஞம் என்ற நகரைக் கைப்பற்றியதும், தெலுங்கவீமனது தென்கலிங்கநாட்டைத் தன்னடிப்படுத்தியதும், திருவனந்தபுரத்தெம்பெருமானுக்கு மணிவிளக்குகள் பத்து அமைத்ததும், கூபகத்*தரசன்மகளை மணந்து கொண்டதும், அளப்பனவும் நிறுப்பனவும் ஆகிய கருவிகளிற் கயல்முத்திரை பொறித்ததும் அறியப்படுகின்றன. இவன் வென்றதாகச் சொல்லப்பட்டுள்ள தெலுங்கவீமனை விக்கிரமசோழனும் வென்முன் என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. ஒரேகாலத்திலிருந்த இவ்விருவேந்தரும் ஒருங்குசேர்ந்து தெலுங்கவீமனை வென்றிருத்தல்வேண்டுமென்று கருதலாம்.

மாறவர்மன் சீவல்லபன்:—இவன் மேலேகுறித்துள்ள பராந்தக பாண்டியனுக்கு என்னமுறையினன் என்பது புலப்படவில்லை. இவன் கி. பி. 1132-ல் பட்டத்திற்கு வந்தவன். திருவாங்கூர் இராச்சியத்தையாண்ட வீரரவிவர்மன் என்பான் இவனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகவிருந்தனன்.† இவ்வேந்தன் கல்வெட்டுக்கள் திருநெல்வேலிஜில்லாவிற் பலஇடங்களில் உள்ளன.

சடையவர்மன் குலசேகரபாண்டியன்:—இவன் மாறவர்மன் சீவல்லபன்புதல்வன்; கி. பி. 1161-ல் முடிசூடியவன். இவன் திருநெல்வேலியிலிருந்து பாண்டிநாட்டின் தென்பகுதியை ஆட்சி புரிந்கொண்டிருக்கும் நாட்களில், பராக்கிரமபாண்டியன் என்பான் மதுரையிலிருந்து பாண்டிநாட்டின் வடபாதியை ஆண்டுவந்தனன். இவ்விருவேந்தர்களுக்கும் எக்காரணம்பற்றியோ பகைமையுண்டாயிற்று. குலசேகரபாண்டியன் மதுரைமாநகர்மீது படையெடுத்துச்சென்று அதனை முற்றுகையிட்டான். பராக்கிரமபாண்டியன் இலங்கைமன்னனாகிய பராக்கிரமபாகுவைத் தனக்கு உதவி புரியுமாறு பெரும்படையொன்றனுப்ப வேண்டினன். அவ்வேந்தனும் இலங்காபுரித்தண்டநாயகன் தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பினன். அத் துணைப்படை பாண்டிநாட்டிற்குவருவதற்குள் குலசேகரபாண்டியன் பராக்கிரமபாண்டியனையும் அவன் மனைவி மக்களையும்பிடித்துக் கொன்றுவிட்டான்.‡ இலங்காபுரித்தண்டநாயகன் தன்படையுடன் பாண்டிநாட்டிற்குட் புகுந்து பல இடங்களிற்

---

* கூபகம்—தென் திருவாங்கூர் இராச்சியம்

† The Pandyan Kingdom By Mr. K. A. Neelakanta Sastri.

‡ சோழவம்ச சரித்திரம்.

கொள்ளையிட்டுக் குலசேகரபாண்டியனைப் புறங்காட்டியோடச்செய்தனன். இந்நிலையில் இலங்காபுரித்தண்டநாயகனுக்கு உதவிபுரியுமாறு சகத்விசயதண்டநாயகன் என்பான் இலங்கையிலிருந்து ஒரு பெரும்படையுடன் வந்துசேர்ந்தனன். இவ்விரு தலைவர்களும் குலசேகரனைப் போரில்வென்று அவனாற் கொல்லப்பட்ட பராக்கிரமபாண்டியன்புதல்வனாகிய வீரபாண்டியற்கு மதுரையில் முடிசூட்டுவிழா நடத்தினர். போரில் தோல்வியுற்று மதுரைமாநகரைவிட்டோடிய குலசேகரபாண்டியன் அந்நாளிற் சோழமண்டலத்தில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த இரண்டாம் இராசாதிராசசோழனைத் தனக்குதவிபுரியுமாறு வேண்டினன். அச்சோழமன்னனும் பல்லவராயனான திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பியின் தலைமையிற் பெரும்படையொன்றை யனுப்பினன். பல்லவராயன் பாண்டிநாட்டிற்குச் சென்று இலங்கைப்படையோடு போர்புரிந்து அதனைத் தோல்வியுற்றோடுமாறுசெய்து, பிறகு குலசேகரபாண்டியனை வருவித்துப் பாண்டிநாட்டை யாண்டுவரும்படி ஏற்பாடு செய்தான்.

இச்செய்திகள் காஞ்சிமாநகரத்தையடுத்துள்ள ஆரப்பாக்கத்துக் கல்வெட்டிலும் * இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளன. இவ்விரண்டிற்கும் சிற்சில வேறுபாடுகளும் உண்டு. அன்றியும், திருவாலங்காட்டிலுள்ள இரண்டாம் இராசாதிராசசோழனது 12-ம் ஆண்டுக் கல்வெட்டும் † மாயூரத்திற்கு அண்மையிலுள்ள பல்லவராயன்பேட்டையிற் காணப்படும் அவனது 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டும் ‡ இவ்வரலாற்றை நன்குணர்த்துகின்றன. இங்ஙனம் சோழமன்னன் உதவியினாற் பாண்டிநாட்டைப்பெற்று ஆட்சிபுரிந்துவந்த குலசேகரபாண்டியன் எத்தனை ஆண்டுகள் அரசாண்டனன் என்பது தெரியவில்லை; ஆயினும் கி. பி. 1180 வரை ஆண்டிருத்தல்கூடும்.

மாறவர்மன் விக்கிரமபாண்டியன்:—இவன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் மகன்; அவன் இறந்தபின்னர், பாண்டிநாட்டின் அரசுரிமை எய்தியவன். இவனது ஆளுகையின் தொடக்கத்தில், முன்னர்த் தோல்வியுற்றோடிய வீரபாண்டியன் சிங்களப்படையின் துணைகொண்டு மீண்டும் போர்புரியத்தொடங்கினான். இராசாதிராசசோழனுக்குப்பின்னர் முடிசூடிய மூன்றாங்குலோத்துங்க சோழன் இவ்விக்கிரமனுக்குத் துணைப்படையனுப்பினான். இம்

* Inscription No. 20 of 1899. † Inscription No. 465 of 1905.
‡ Inscription No. 433 of 1924.

முறை நிகழ்ந்த போரிலும் சிங்களப்படை புறங்காட்டியோடவே, வீரபாண்டியன் தோல்வியுற்றுன்.* சோழநாட்டுப்படைத்தலைவனுகிய அம்மையப்பன் இராசராசசம்புவராயன் மதுரைமாநகரைக் கைப்பற்றி அங்கு வெற்றித்தூண் நிறுவினுன். சோழர்க்குத் திறை செலுத்திவந்த இவ்விக்கிரமபாண்டியனிடம் இராச்சியத்தை ஒப்பித்து ஆண்டுவருமாறுசெய்து அப்படைத்தலைவன் சோழநாட்டிற்குத் திரும்பினுன். இது கி. பி. 1182-ஆம் ஆண்டிற்குமுன் நிகழ்ந்திருத்தல்வேண்டும்.

வீரபாண்டியன் மற்றும் ஒருமுறை மூன்றுங் குலோத்துங்க சோழனேடு நெட்டூரிற் போர்புரிந்து தோல்வியுற்றுத் தன்சுற்றத்தாரோடு திருவாங்கூர் இராச்சியத்திற்கு ஓடிவிட்டான்.† பிறகு இவனைப்பற்றிய செய்திகள் தெரியவில்லை. விக்கிரமபாண்டியன் சில ஆண்டுகள் அமைதியுடன் ஆட்சிபுரிந்து கி. பி. 1190-ஆம் ஆண்டில் விண்ணுலகடைந்தான்.

ஏழாம் அதிகாரம்.

கி. பி. 1190 முதல் கி. பி. 1310 முடிய ஆட்சிபுரிந்த பாண்டியர்கள்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதிக்காலத்தே பாண்டியரது ஆட்சி மீண்டும் உயர்நிலையை எய்தத்தொடங்கிற்று. ஆயினும், அந்நாட்களிற் பெருவீரனுகிய மூன்றுங்குலோத்துங்க சோழன் சோழமண்டலத்தில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்தமையின், பாண்டி வேந்தன் அவனுக்கு அடங்கி நடத்தல் இன்றியமையாததாயிற்று. அன்றியும், வீரபாண்டியனைப் போரிற் புறங்காட்டியோடச் செய்து தன் தந்தையாகிய விக்கிரமபாண்டியற்கு மூன்றுங்குலோத்துங்க சோழன் மதுரையில் முடிசூட்டிவைத்த பேருதவியைச் சடையவர்மன் குலசேகரன் அத்துணை அண்மையில் மறந்துபோயிருத்தலும் இயலாது. எனவே, மூன்றுங் குலோத்துங்கசோழன் கி. பி. 1216-ஆம் ஆண்டில் இறந்தபின்னர், பாண்டியர் சோழர்க்குத் திறை செலுத்தாது பேரரசர் ஆயினர். இதற்கேற்ப, அக்காலத்திற் சோழமண்டலத்தில் ஆட்சிபுரிந்துவந்த மூன்றும் இராசராசசோழனும் வலிகுன்றியவனுயிருந்தனன். இவனுக்குப் பின்னர் அரசாண்டசோழ

---

* Inscription I of 1899 (திருக்கொள்ளம்பூதூர் - மூன்றுங் குலோத்துங்கசோழனது 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு.)

† The Pandyan Kingdom by Mr. K. A. Neelakanta Sastri.

மன்னர்களும் அத்தகையினரே. ஆகவே, பாண்டியர் பேராண்மையும் பெரு வீரமுமுடையவர்களாய்ப் பிறநாடுகளைவென்று தம்மடிப் படுத்தி மிகவும் உயர்நிலையை அடைந்து வாழ்ந்தகாலம் இதுவே என்று சிறிதும் ஐயமின்றிக் கூறலாம். இனி, இதன் உண்மையை ஆராய்ந்துகாண்போம்.

சடையவர்மன் குலசேகரபாண்டியன் I:—இவன் கி. பி. 1190ல் முடிசூட்டப்பெற்று, கி. பி. 1216 வரையில் அரசாண்டவன்; மூன்றுங்குலோத்துங்க சோழனுக்குப் பெருநட்பினனும் அவனால் ஆதரிக்கப் பெற்றவனுமாகிய விக்கிரமபாண்டியன் புதல்வன். 'பூதல மடந்தை' எனவும், 'பூவின்கிழத்தி' எனவும், 'பூதலவனிதை' எனவும் தொடங்கும் இவன் மெய்க்கீர்த்திகள்* இவனைப் புகழ்ந்து கூறுகின்றனவேயன்றி இவன் வரலாற்றை நன்கு விளக்குவனவாயில்லை. இவன் கல்வெட்டுக்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிற் காணப்படுதலால் இவனது ஆளுகை இம்மூன்று ஜில்லாக்களிலும் நிலவியிருத்தல்வேண்டும். இவனுடைய அரசியல் அதிகாரிகளுள் மிகச்சிறந்தவன், களவழிநாடாள்வானாகிய சயங்கொண்ட சோழசீவள்ளுவன் என்பான். இவ்வேந்தன் தனது தலைநகராகிய மதுரையிலிருந்த சிங்காதனங்களை மழவராயன், முனையதரையன் என்ற பெயர்களால் வழங்கிவந்தனன் என்பது பல கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது. (Inscriptions 550 and 660 of 1916.) திருநெல்வேலியிலும் மழவராயன் என்ற பெயருடைய சிங்காதனம் ஒன்று இருந்ததென்பது ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. (Inscription No. 507 of 1916). மலைநாட்டரசனாகிய சேரமான் கோதை ரவிவர்மன் என்பவன் இக்குலசேகரபாண்டியனுக்கு மைத்துனக்கேண்மை உடையவனாய் விளங்கினான் என்று திருநெல்வேலி ஜில்லா சேரமாதேவியிலுள்ள சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. (Ins. 664, 665 and 666 of 1916). இவனைப்பற்றிய பிற செய்திகளை அறிவிக்கக் கூடிய கருவிகள் இப்போது கிடைக்கவில்லை.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் I:—இவன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் தம்பி; விக்கிரமபாண்டியனுடைய இரண்டாம் புதல்வன்; கி. பி. 1216 முதல் கி. பி. 1238 முடிய மதுரையில் முடிமன்னனாக வீற்றிருந்து ஆட்சிபுரிந்தவன்; பிற்காலத்தில் பாண்டிய ராச்சியத்தை நன்னிலைக்குக் கொண்டுவந்த பெருந்தகை. 'பூமரு

* Annual Report on Epigraphy for the years 1916—17, p. 109.

விப திருமடந்தை' என்று தொடங்கும் நீண்ட மெய்க்கீர்த்தி இவ் வேந்தற்கு உரியதாகும். இம்மெய்க்கீர்த்தியால் இம்மன்னன் காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றை நன்கறியலாம். இவ்வரசன் பட் டம் எய்திய கி. பி. 1216-ஆம் ஆண்டில் சோழமண்டலத்தில் மூன் றாம் இராசராசசோழன் அரியணைபெறினன். இச்சோழமன்னன் தன் நாட்டைக்காத்தற்கேற்ற ஆற்றலும் ஆண்மையும் அற்றவனாக இருந்தமையின் சோழமண்டலத்தைவென்று தன் வெற்றிப்புகழை யாண்டும் பரப்பவேண்டும் என்ற எண்ணம் சுந்தரபாண்டியனுக்கு உண்டாயிற்று. அன்றியும், தன் முன்னோர்கள் பாண்டிநாட்டை அரசாளும் உரிமையை இராசராசசோழன் முன்னோர்களது பேருத வியினாற் பெற்றனர் என்ற செய்தியையும் இப்பாண்டியன் அறவே மறந்தொழிந்தனன். ஆகவே, கி. பி. 1219 ஆம் ஆண்டில் இவன் சோழமண்டலத்தின்மீது படையெடுத்துச்சென்று அதனை கைப்பற் றிக் கொண்டான். இப்படையெழுச்சியில் தஞ்சையும் உறையூரும் பாண்டிநாட்டு வீரர்களால் கொளுத்தப்பட்டன; பல மாடமாளிகை களும் கூடகோபுரங்களும் ஆடரங்குகளும் அழிக்கப்பெற்றன. மூன்றாம் இராசராசசோழனும் ஓடி ஒளிந்தனன். வெற்றியெய் திய சுந்தரபாண்டியன் ஆயிரத்தளி*க்குச் சென்று சோழரது அபி டேக மண்டபத்தில் வீராபிடேகஞ் செய்துகொண்டு தில்லையம்பதிக் குச் சென்று பொன்னம்பலவாணரைத் தரிசித்து மகிழ்கூர்ந்தான்.

பின்னர், இப்பாண்டிவேந்தன் பொன்னமராவதியில் †தங்கியி ருக்கும் நாட்களில் மூன்றாம் இராசராசசோழன் தன் மனைவிமக்க ளோடு அங்குச்சென்று, தன் நாட்டை அளிக்குமாறு குறையிரந்து நிற்ப, இவனும் அருள்கூர்ந்து அங்ஙனமே சோழமண்டலத்தை இராசராசனுக்கு அளித்தனன். இதுபற்றியே இவ்வேந்தனும் 'சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்' என்று கல்வெட்டுக் களிற் குறிக்கப்பெற்றுள்ளான். இது கி. பி. 1223 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருத்தல்வேண்டும். இச்செய்திகளையெல்லாம்,

'பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப்
பொன்னிசூழ் நாட்டிற் புலியாணை போயகலக்

---

* ஆயிரத்தளி என்பது நித்தவிநோதவளநாட்டுக் கிழார்க்கூற்றத்துள்ள அமராவதி என்னும் ஊர் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. (Inscription No. 549 of 1926.) தஞ்சைக்கு மேற்கேயுள்ள நியமமும் ஆயிரத்தளி எனப்படுகின்றது. (S. I. I. Vol. II.)

† பொன்னமராவதி புதுக்கோட்டை நாட்டிலுள்ளது.

கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர
வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியு நீலமும் நின்று கவினிழப்ப
வாவியு மாறு மணிநீர் நலனழித்துக்
கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும்
மாடமு மாளிகையும் மண்டபமும் பலவிடித்துத்
தொழுதுவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுத கண்ணீ ராறு பரப்பிக்
கழுதைகொண் டுழுது கவடி வித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டிப்
பைம்பொன் முடிபறித்துப் பாணருக்குக் கொடுத்தருளிப்
பாடருஞ் சிறப்பிற் பருதி வான்றோய்
ஆடகப் புரிசை ஆயிரத் தளியிற்
சோழ வளவன் அபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகஞ் செய்து புகழ்விரித்து
நாளும் பரராசர் நாமத் தலைபிடுங்கி
மீளுந் தறுகண் மதயானை மேற்கொண்டு
நீராழி வைய முழுதும் பொதுவொழித்துக்
கூராழியுஞ் செய்ய தோளுமே கொண்டுபோய்
ஐயப்படாத வருமறைதே ரந்தணர்வாழ்
தெய்வப் புலியூர்த் திருவெல்லை யுட்புக்குப்
பொன்னம் பலம்பொலிய ஆடுவார் பூவையுடன்
மன்னுந் திருமேனி கண்டு மனங்களித்துக்
கோல மலர்மே லயனுங் குளிர்துழாய்
மாலு மறியா மலர்ச்சேவடி வணங்கி
வாங்குசிறை யன்னந் துயிலொழிய வண்டெழுப்பும்
பூங்கமல வாவிசூழ் பொன்னம ராவதியில்
ஒத்துலகந் தாங்கு முயர்மேருவைக் கொணர்ந்து
வைத்தனைய சோதி மணிமண்ட பத்திருந்து
சோலை மலிபழனச் சோணாடுந் தானிழந்த
மாலை முடியுந் தரவருக வென்றழைப்ப
மானநிலை குலைய வாழ்நகரிக் கப்புறத்துப்
போன வளவ னுரிமை யொடும்புகுந்து
பெற்ற புதல்வனைநின் பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து தொழுதிரப்பத்
தாணேடி முன்னிகழ்ந்த தன்மையெலாங் கையகலத்

தானேதகம் பண்ணித் தண்டார் முடியுடனே
விட்ட புகலிடந்தன் மாளிகைக் குத்திரிய
விட்டபடிக் கென்று மிதுபிடிபா டாகவென
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தோள்விளங்குஞ்
செங்கயல் கொண்டுன் றுந் திருமுகமும் பண்டிழந்த
சோளபதி யென்னு நாமமுந் தொன்னகரும்
மீள வழங்கி விடைகொடுத்து விட்டருளி'

என்னும் இவனது மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதியினால் நன்கு உணரலாம்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் மூன்றாம் இராசராசசோழன் சுந்தரபாண்டியனுக்குத் திறைகொடுக்க மறுத்தனன். எனவே, கி. பி. 1235-ஆம் ஆண்டில் சுந்தரபாண்டியன் சோழமண்டலத்தின் மீது மீண்டும் படையெடுத்துச்சென்று இராசராசனோடு போர் புரிந்து வெற்றியெய்தினான். இங்ஙனம் வெற்றிபெற்றவன் சோழர் களுக்குரிய முடிகொண்டசோழபுரம்* என்னும் சிறந்த நகரத்திற் குச் சென்று அங்கு வீராபிடேகம் செய்துகொண்டான். இவ னுடைய ஆட்சியின் இருபதாம் ஆண்டிற் பொறிக்கப் பெற்ற கல்வெட் டுக்கள் 'ஸ்ரீகோமாறவர்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் சோணாடு கொண்டு முடிகொண்டசோழபுரத்து வீராபிடேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர்' என்று இவனைப் புகழ்ந்து கூறுகின் றன. இவனுடைய கல்வெட்டுக்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலான ஜில்லாக்களிலும் புதுக்கோட்டை இராச்சியத்திலும்காணப் படுதலால் இவை இவனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டுமென் பது வெளியாகின்றது.

வடகொங்கு தென்கொங்கு இவ்விருநாட்டுவேந்தர்களும் தமக் குள் உண்டாகிய முரண்பாட்டைத் தீர்க்குமாறு சுந்தரபாண்டியனை

*முடிகொண்டசோழபுரம் என்பது கும்பகோணத்திற்கு மேற்புறத் துள்ள தாராசுரம் ஸ்டேஷனுக்குத் தெற்கேயுள்ள பழையாறையையும் அதனைச் சூழ்ந்துள்ள முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், சோழ மாளிகை, ஆரியப்படையூர், பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படை யூர், திருமேற்றளி, சுந்தரப்பெருமாள்கோயில் ஆகிய ஊர்களையும் தன்னகத்து அடக்கிக்கொண்டு முற்காலத்தில் பெருநகரமாக விளங்கியது. இங்குச் சோழமன்னர்களது அரண்மனை நிலைபெற்றிருந்த இடம் இப்போது சோழ மாளிகை என்ற தனியூராக இருக்கின்றது. (Inscription No. 271 of 1927.)

வேண்ட, இவனும் அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தனன். இம்முரண்பாட்டைப் பற்றிய வரலாறு தெரியவில்லை. (The Pandyan Kingdom Page 146.)

இனி, இவ்வரசனுடைய பட்டத்தரசி உலகமுழுதுடையாள் என்று வழங்கப்பெற்றனள் என்பதும், உய்யநின்றாடுவானான குருகுலதரையன் இவனுக்கு அமைச்சனாக இருந்தனன் என்பதும், கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன், திருக்கானப்பேருடையான் மழவச்சக்கரவர்த்தி ஆகியோர் இவனுடைய அரசியலதிகாரிகளாக இருந்தனர் என்பதும் பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன. (Ins. No. 554 of 1922; Ins. No. 75 of 1924; Ins.No. 47 of 1924.)

இவனுடைய அவைக்களப்புலவராக விளங்கியவர் காராணைவிழுப்பரையர் என்பார். இஃது இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர்த் தாலுகாவிலுள்ள பெருச்சிக்கோயிலில் வரையப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டாற் புலப்படுகின்றது. (Ins. No. 75 of 1924.)

இம்மன்னன் கி. பி. 1238-ல் இறந்தபிறகு பட்டம் எய்தியவன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் என்பான்; இவன் சில திங்களே அரசாண்டிருத்தல்வேண்டும். இவன் மாறவர்மன் சுந்தரபாண்டியற்கு என்னமுறையினன் என்பதையும் இவனைப்பற்றிய பிறசெய்திகளையும் இப்போது அறிய இயலவில்லை.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் II :—இவன் கி. பி. 1238-ஆம் ஆண்டில் பட்டம்பெற்றவன்; இவனுடைய ஆட்சிக்காலத்தில் போசளமன்னனாகிய வீரசோமேச்சுரன் நெருங்கிய உறவினால் பிணிக்கப்பெற்று இவனுக்கு நட்பினனாக இருந்தனன் என்பது பல கல்வெட்டுக்களால் தெரிகின்றது. இவன் மெய்க்கீர்த்தி 'பூமலர்த்திருவும் பொருசயமடந்தையும்' என்று தொடங்குகின்றது. இஃது, இவன் வரலாற்றை உணர்த்தக்கூடிய நிலையில் இல்லை. இவன் கி. பி. 1253 வரையில் அரசாண்டான். இவன்காலத்து நிகழ்ச்சிகளை அறிவிக்கக்கூடிய கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் I :—இவ்வேந்தன் கி. பி. 1251-ஆம் ஆண்டில் முடிசூடியவன்; எடுப்பும் இணையுமற்ற பெருவீரன். இவனுடைய ஆளுகையில் பாண்டியராச்சியம் மிகச் சீரிய நிலையை எய்திற்று. இவனுடைய கல்வெட்டுக்கள் வடக்கேயுள்ள

கிருஷ்ணை என்ற பேராறுவரையிலுள்ள பலநாடுகளிலும் காணப்படுகின்றன. எனவே, இவனது ஆட்சி நமது தமிழகத்திலும் அதற்கப்பாலுள்ள பிறநாடுகளிலும் பரவியிருந்திருத்தல்வேண்டும். இவன் மெய்க்கீர்த்தி 'பூமலர் வளர்திகழ் திருமகள்' என்று தொடங்குகின்றது. இது சுந்தரபாண்டியனது அரிய வீரச்செயல்களையும் இவன் வென்ற நாடுகளையும், செய்த திருப்பணிகளையும் நன்கு விளக்குகின்றது. இதன் துணைகொண்டு அவற்றை ஆராய்வாம்.

முதலில், சடையவர்மன் சேரநாட்டின்மீது படையெடுத்துச் சென்றான்; சேரமன்னன் இவனை எதிர்த்துப் போர்புரியும் ஆற்றலின்றிப் புறங்காட்டியோடவே, மலைநாட்டைக் கைப்பற்றித் தன் ஆட்சிக்குள்ளாக்கினன்; பிறகு, சோழமன்னனைவென்று தனக்கு ஆண்டுதோறும் திறைசெலுத்திவருமாறு செய்தான்; இவன்காலத்திற் சோழமண்டலத்தில் அரசாண்டவன் மூன்றாம் இராசேந்திர சோழன் என்பான்; இவன் வலிகுன்றியவனாயிருந்தமையின் பாண்டியற்குத் திறைசெலுத்தும் நிலையையடைந்து சிறுமையுற்றான். இவ்விராசேந்திரசோழன் காலமுதல் சோழர்கள் மிகத்தாழ்வுற்றுக் குறுநிலமன்னர் ஆயினர்.

பின்னர், போசளர் இவ்வரசனால் தாக்கப்பெற்றனர்; சோழநாட்டிற் போசளர்க்குரிய நகரமாயிருந்த கண்ணனூர்க்கொப்பம்* முற்றுகையிடப்பெற்றது; பல போசளவீரர்கள் போரிற் கொல்லப்பட்டனர்; போசளத் தண்டநாயகனாகிய சிங்கணன் முதலானோரும் கொல்லப்பட்டனர். போசளரும் மூன்றாம் இராசராசசோழன் காலமுதல் தமக்குரியதாக வைத்திருந்த கண்ணனூர்க்கொப்பத்தை இழந்தார்கள். இந்நாட்களில் ஆட்சிபுரிந்த போசளமன்னன் வீரசோமேச்சுரன் என்பான். போசளரோடு நிகழ்த்திய இப்போரில் எண்ணிறந்த யானைகளையும் குதிரைகளையும் நிதிக்குவியல்களையும் சடையவர்மன் கைப்பற்றிக்கொண்டான்; பிறகு இலங்கையரசனைவென்று அவன்பால் யானைகளையும் பலவகை மணிகளையும் கப்பமாகப் பெற்றான்.

அதன்பின்னர், இவ்வேந்தன் பல்லவமன்னனாகிய கோப்பெருஞ்சிங்கன் அனுப்பிய கப்பத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவனது தலைநகராகிய சேந்தமங்கலம்† சென்று அதனை முற்றுகையிட்டுக் கைப்

---

* கண்ணனூர்க்கொப்பம் என்பது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ளது.

† சேந்தமங்கலம் என்பது தென்னார்க்காடு ஜில்லாவில் திருவதிகைக்கு மேற்கே திருநாவலூர்க்கருகில் உள்ளது.

பற்றியதோடு அவனது யானை குதிரைகளையும் பிறசெல்வங்களையும் கவர்ந்துகொண்டான்; பின்னர், அவற்றையெல்லாம் அவனுக்கே அளித்து அவனைத் தன் ஆணைக்கடங்கி நடக்கும் குறுநிலமன்ன னாக்கித் திரும்பினான்.

பிறகு, இம்மன்னன் தில்லையம்பலத்துக்குச் சென்று முக்கட் பெருமானை வணங்கிக் கோயிலைப் பொன்வேய்ந்து அங்குத் துலாபார தானம் செய்தனன்; பின்னர், திருவரங்கஞ்சென்று திருமாலையும் வணங்கிக் கோயிலையும் பொன்வேய்ந்து அங்கு முடிசூடிக்கொண்டு துலாபாரதானமுஞ் செய்தான். திருவரங்கத்தில் இவனாற் செய்யப் பட்ட திருப்பணிகளும், விடப்பட்ட நிபந்தங்களும் பலவாகும். கோயிலொழுகு என்ற வைணவநூலினும் அச்செய்திகளைக் காணலாம்.

இங்ஙனம் தில்லையிலும் திருவரங்கத்திலுமுள்ள திருக்கோயில் களைப் பொன்வேய்ந்தமைபற்றி, இவன் 'கோயில் பொன்வேய்ந்த பெருமாள்' என்று வழங்கப்பெற்றனன். இவன் கோயில்பொன் வேய்ந்தபெருமாள் என்னும் பெயருடன் படிமங்கள் அமைப்பித்து அவற்றிற்குத் திங்கள்தோறும் தன் பிறந்தநாளாகிய மூலத்தன்று விழாக்கொண்டாடுமாறு ஏற்பாடுசெய்தான்.

இனி, இவ்வேந்தன் வாணர்களுடைய மகதநாட்டையும் கொங் கர்களுக்குரிய கொங்குநாட்டையும் தன்னடிப்படுத்தியமையும், தெலுங்கச் சோழனாகிய கண்டகோபாலனைப் போரிற்கொன்று அவ னாட்சிக்குள்ளிருந்த காஞ்சிமாநகரையும் நெல்லூரையும் கைப்பற்றி நெல்லூரில் வீராபிடேகம் செய்துகொண்டமையும், பின்னர் அவன் தம்பியர்வந்து வணங்க அவர்கட்கு இராச்சியத்தை அளித்தமையும் இங்குக் குறித்தற்குரியனவாகும்.

இங்ஙனம் பலநாடுகளைவென்று தன்னடிப்படுத்தித் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி முடிமன்னனாக விளங்கிய சுந்தரபாண்டி யன் 'எம்மண்டலமுங் கொண்டருளிய சுந்தரபாண்டியதேவர்' என்று வழங்கப்பெற்றனன் என்பது பல கல்வெட்டுக்களாற் புலப்படு கின்றது.

இவனுடைய வீரச்செயல்களையும் திருப்பணிகளையும் விளக்கும் பல செந்தமிழ்ப்பாக்களும் வடமொழிச் சுலோகங்களும் சிதம்பரம், திருவரங்கம், திருப்புட்குழி முதலான இடங்களிலுள்ள திருக்கோ யில்களில் வரையப்பட்டுள்ளன. (செந்தமிழ்த் தொகுதி 4 பக்கங்கள் 491, 492, 514, 516, Epigraphia Indica Vol. 3, No. 2.)

இவ்வேந்தன்காலத்தில் நிலவிய பிற பாண்டிமன்னர்கள் சடையவர்மன் குலசேகரபாண்டியன் II, விக்கிரமபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் என்போர்;* இவர்கள் சுந்தரபாண்டியற்கு என்ன முறையினர் என்பதும், நாட்டில் எப்பகுதியை எவ்விடத்திலிருந்து ஆட்சிபுரிந்தனர் என்பதும் புலப்படவில்லை. இவர்களுள் வீரபாண்டியன் கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிலும் புதுக்கோட்டை ராச்சியத்திலும் கோயம்புத்தூர் காஞ்சி முதலான இடங்களிலும் உள்ளன. இவன் ஈழம், கொங்கு முதலியவற்றை வென்றதையும் தில்லையம்பதியிற் பல்லவனை கோப்பெருஞ்சிங்கனிடத்தில் திறை பெற்றதையும் சோழமன்னனோடு போர்புரிந்ததையும் இவனுடைய கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இப்போர்ச்செயல்கள் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, முடிமன்னனாகிய சுந்தரபாண்டியனுடைய ஆணையின்படி வீரபாண்டியன் படைத்தலைமை பூண்டு இப்போர்களை நிகழ்த்தியிருத்தல்வேண்டும் என்று கொள்வதே பொருத்தமுடையது.

இனி, சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1268 வரை ஆட்சிபுரிந்தனன் என்று ஒரு சாராரும் கி. பி. 1270-க்கு மேலும் ஆண்டிருத்தல்வேண்டும் என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இதுகாறும் அரசாங்கத்தாரால் எடுக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்களெல்லாம் அச்சிட்டு வெளியிடப்பட்டாலன்றி இதுபோன்ற ஐயங்களை நீக்குதல் எளிதன்று.

மாறவர்மன் குலசேகரபாண்டியன் I:—இவன் கி. பி. 1268 முதல் கி. பி. 1311 வரையில் அரசாண்டவன். இவனைக் 'கோனேரின்மை கொண்டான்' எனவும் 'புவனேகவீரன்' எனவும் வழங்குவர். 'தேர்போல்' என்று தொடங்கும் இவனது மெய்க்கீர்த்தி இவனது வரலாற்றையறிதற்குச் சிறிதும் பயன்படாததாக இருக்கின்றது.

இவன்காலத்தில் பாண்டியராச்சியம் செழிப்புற்று உயர்நிலையிலிருந்தது. இவன் அரசாளும் நாட்களில் 'இத்தாலியா' நாட்டு 'வெனிசு' நகரத்தானாகிய 'மார்க்கபோலோ' என்பவன் பாண்டிநாட்டிற்குவந்து பலநகரங்களையும் சுற்றிப்பார்த்து இவனது ஆளுகையைப் பெரிதும் புகழ்ந்து தன் நூலில் எழுதியுள்ளான். அவன், பாண்டிநாட்டிற்குத் தான் சென்றபோது அங்குப் பாண்டியர் ஐவர்

*The Pandyan Kingdom pp. 172, 174 and 175.

ஆண்டுவந்தனர் என்றும், அவர்களுள் குலசேகரபாண்டியனே மூத்தவன் என்றும், அவன் தன் தலைநகராகிய மதுரையில்பெரும்பொருள் சேர்த்து வைத்திருந்தான் என்றும், அவனது உரிமைச் சுற்றத்தினர் சிறந்த அணிகலன்களைப் பூண்டுகொள்வது வழக்கம் என்றும், அவன் தன் இராச்சியத்தில் நடுவுநிலைமையுடன் செங்கோல்செலுத்தி வந்தான் என்றும், வாணிபஞ்செய்வோராகிய பிறநாட்டுமக்களிடத்து அவன் பேரன்புடன் நடந்துவந்தமையின் அன்னோர் அவனது பாண்டிநாட்டிற்குப் போதற்குப் பெரிதும் விரும்பினர் என்றும் தன் குறிப்பில் வரைந்திருக்கின்றான்.

அந்நாட்களில், பாண்டிநாட்டிற்கு வந்த மகமதியனாகிய 'வாசப்' என்பானும் இவ்வேந்தனுட்சிறை அங்ஙனமே புகழ்ந்துரைத்ததோடு இவன் தலைநகரில் ஆயிரத்திருநூறுகோடிப் பொன்னும் முத்துக்களும் வைத்திருந்தான் என்றும் குறித்துள்ளான்.

இவன்காலத்துப் போர்நிகழ்ச்சிகள், இவன் ஈழநாட்டின்மீது படையெடுத்ததும், சேரநாட்டிலுள்ள கொல்லத்தைக் கைப்பற்றியதுமேயாம்.

குலசேகரபாண்டியனும் அவன் தம்பிமார்களும் தம் படைத்தலைவர்களுள் மிகச்சிறந்தவனாகிய ஆரியச்சக்கரவர்த்தியின் தலைமையின்கீழ் ஒரு பெரும்படையை ஈழநாட்டிற்கு அனுப்பினர். அப்படை அந்நாட்டிற் பல நகரங்களையும் கோட்டைகளையும் அழித்துப் பொருள்களைக் கொள்ளையிட்டுப் புத்ததேவரது மாண்புவாய்ந்த பல்லையும் கைப்பற்றிக்கொண்டு வெற்றியுடன் பாண்டிநாட்டிற்குத் திரும்பிற்று. பாண்டியரோடு போர்புரிந்து அப்பல்லைப் பெறுதற்கு இயலாத நிலையிலிருந்த ஈழநாட்டு மன்னனாகிய மூன்றாம் பராக்கிரமபாகு என்பான் குலசேகரபாண்டியனைப் பணிந்து நட்புரிமைகொண்டு அதனைத் திரும்பப்பெற்றுச் சென்றனன்.*

இது கி. பி. 1284-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகும். இச்செய்தி இலங்கைச் சரிதமாகிய மகாவம்சத்திலும் சொல்லப்பட்டுளது. குலசேகரபாண்டியன் மலைநாட்டிலுள்ள கொல்லத்தைவென்று கைப்பற்றிக் கொண்டமையால், 'கொல்லங்கொண்டான்' என்ற பட்டமெய்தினன்.

---

* நான்காம் பராக்கிரமபாகுவினால் புத்ததேவரது பல்லிற்கு ஒரு பெருங்கோயில் பின்னர் அமைக்கப்பெற்றது. (Ancient Dekhan page 171.)

சோழநாட்டிற் பல இடங்களில் இவன் கல்வெட்டுக்கள் காணப் படுதலால் இந்நாடு முழுவதும் இவனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலப்படுகின்றது. அன்றியும் இவனுக்கு முன்னர் அரசாண்ட சடையவர்மன் சுந்தரபாண்டியனது ஆளுகை யின்கீழிருந்த எல்லாநாடுகளும் இவனுடைய ஆட்சிக்கும் உட்பட்டி ருந்தன என்பது அவ்விடங்களிற்காணப்படும் இவனுடைய கல்வெட் டுக்களால் அறியப்படுகின்றது.

மாறவர்மன் விக்கிரமபாண்டியனும்,* சடையவர்மன் சுந்தர பாண்டியன்† என்ற பெயருடைய இருவரும், சடையவர்மன் வீர பாண்டியனும் இவன்காலத்திருந்தனர் என்று வரலாற்று ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர். (The Pandyan Kingdom Page. 180.) அவர்கள் எவ்வெப்பகுதிகளை ஆண்டனர் என்பது தெரியவில்லை.

இவ்வேந்தன்காலத்தில் மாவலிவாணராயன் என்ற பட்ட முடைய பல அரசியல் தலைவர்கள் பாண்டிநாட்டில் இருந்தனர் என்று தெரிகிறது.

குலசேகரபாண்டியற்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்ற இருபுதல்வர் இருந்தனர். இவர்களுள், சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் புதல்வன்; வீரபாண்டியன் காதற்கிழத்தியின் மகன். இவ்விருவருள் வீரபாண்டியனே ஆண்மையும் வீரமுமுடைய னாக விளங்கினான். இதனையுணர்ந்த குலசேகரபாண்டியன் தனக் குப் பின் தன் இராச்சியத்தை நன்கு பாதுகாத்து ஆட்சிபுரியவல்ல அரசிளஞ்சிங்கம் வீரபாண்டியனே என்று கருதி அவனுக்கு கி. பி. 1296-ல் இளவரசுப்பட்டங் கட்டினான். இராசமாதேவியின் மகனா கிய சுந்தரபாண்டியன் தன் தந்தையின் செயலைப் பெரிதும் வெறுத் தனன். இறுதியில் கி. பி. 1310-ம் ஆண்டில் இவன் தன்தந்தையைக் கொன்று சில போர்வீரர்களின் துணைகொண்டு மதுரைமாநகரில் அரி யணை ஏறினான். இளவரசுப்பட்டங் கட்டப்பெற்ற வீரபாண்டியன் தலைநகரைவிட்டு ஓடிவிட்டான். நாற்பத்துநான்கு ஆண்டுகள் பாண்டி நாட்டைச் சிறப்புடன் அரசாண்ட குலசேகரபாண்டியன் வாழ்நாள் இங்ஙனம் முடிவுற்றது.

---

* இவனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 1283—1296.

† முடிசூடியகாலம் கி. பி. 1276.

எட்டாம் அதிகாரம்.

கி. பி. 1310-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆட்சிபுரிந்த பாண்டியர்.

மிகச் சீரியநிலையிலிருந்த பாண்டியராச்சியம், கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் தாழ்ந்தநிலையை அடையத்தொடங்கிற்று. மாறவர்மன் குலசேகரபாண்டியன் புதல்வர்கள் தம்முட்பகைகொண்டு போர்புரிந்து கொண்டிருந்தமையின் உள்நாட்டிற் குழப்பம் மிகுந்தது. அல்லாவுடீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் காபூர் என்பான் அதனையுணர்ந்து பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, பலநகரங்களைக் கொள்ளையிட்டுப் பெரும்பொருள் திரட்டிச் சென்றனன்.* பாண்டிமன்னர்கள் தம் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளுதற்கேற்ற ஆற்றலின்றி அயலாரது படையெழுச்சியினால் அளவிலாத் துன்பத்திற்காளாயிருந்தமை அன்னோர்க்குத் திறைசெலுத்திவந்த குறுநிலமன்னரும் கலகஞ்செய்து சுயேச்சை அடைதற்கு ஏதுவாயிற்று. ஆகவே, பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே பாண்டிவேந்தர்கள் பெருமையும் வீரமும் ஒருவாறு குறையத் தொடங்கின எனலாம்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் ஆகிய இருவரும் மாறவர்மன் குலசேகரபாண்டியன் புதல்வர்கள் என்பதும், அவர்களுள் சடையவர்மன் சுந்தரபாண்டியன், தன் மாற்றாந்தாயின் மகனும் தன்னினும் இளைஞனுமாகிய வீரபாண்டியனுக்குத் தன் தந்தை நாடாட்சி நல்கினமைபற்றித் தந்தையை வெறுத்துக் கொலைபுரிந்து கி. பி. 1310-ஆம் ஆண்டின் இடையில் அரியணையேறினான் என்பதும் முன்னரே உணர்த்தப்பட்டன. மகமதிய ஆசிரியனாகிய 'வாசப்' என்பான் இச்செய்தியைக் கூறியுள்ளனன்.† ஆனால், கல்வெட்டுக்களால் இதனை உறுதிப்படுத்துவது இப்போது இயலாததொன்றும். ஆயினும், மற்றொரு மகமதிய ஆசிரியனாகிய 'அமீர்குசுரு' என்பான், இளவரசர்களாகிய அவ்விருவரும் பெரும்பகைகொண்டு தமக்குள் போர்புரிந்து கொண்டிருந்தனர் என்று குறித்துள்ளமை அறிதற்குரியதாகும்.‡ எனினும், அவ்விரு

---

* See South India and Her Mahammadan Invaders by Dr. S. Krishnasamy Aiyangar.

† The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri Page 202.

‡ The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, Page 204.

வேந்தர்களது ஆட்சியும் பாண்டிநாட்டில் நடைபெற்றிருத்தல்வேண்டும் என்பது அங்குப் பல ஊர்களிற் காணப்படும் அவர்கள் கல்வெட்டுக்களால் நன்கு புலப்படுகின்றது. சடையவர்மன் வீரபாண்டியன் கி. பி. 1342-ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்தனன் என்று சில கல்வெட்டுக்களால் தெரிகிறது. சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்கள், அவன் கி. பி. 1319-முடிய அரசாண்டனன் என்று உணர்த்துகின்றன. அம்மன்னர் இருவரும் நிகழ்த்திய போரைப் பற்றிய செய்திகளையும் அதன் முடிவையும் தெளிவாக இந்நாளில் அறிதற்கியலவில்லை. அப்போரின் முடிவு எவ்வாறாயினும் அவ்விருவரும் பாண்டிநாட்டில் வெவ்வேறிடங்களில் இருந்து ஒரேகாலத்தில் ஆட்சிபுரிந்திருத்தல் வேண்டுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் ஆட்சிக்காலத்தில் அல்லாவுடீன் கில்ஜியின் படைத்தலைவனுன மாலிக்காபூர் தென்னுட்டின்மீது படையெடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கதொன்ரும். இது கி.பி. 1310-ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்ததென்று மகமதிய சரித்திர ஆசிரியனுகிய 'வாசப்' கூறியுள்ளான். இப்படையெழுச்சியைப் பற்றியசெய்திகளை 'அமீர்குசுரு' என்பவன் எழுதியுள்ள குறிப்புக்களால் ஒருவாறு உணரலாம்.* அந்நாளிற் பாண்டிநாடு மகமதியவீரர்களால் கொள்ளையிடப்பெற்றமையின் அது தன் செல்வத்தையும் சிறப்பையும் இழந்து வறுமையெய்தியது; நாட்டில் அமைதியாக வாழ்ந்துவந்த மக்களெல்லோரும் தம் வாழ்நாளில் என்றும் கண்டறியாத பல்வகை இன்னல்களுக்குள்ளாயினர்; அறநிலையங்களும் கோயில்களும் அழிவுற்றன. சயாவுடீன் பார்னி என்ற மற்றொரு சரித்திராசிரியன், குலசேகரபாண்டியன் புதல்வரிருவருடைய செல்வங்களையும் மாலிக்காபூர் கொள்ளை கொண்டு வெற்றியுடன் டில்லிமாநகருக்குத்திரும்பிச்சென்றனென்று குறித்துள்ளனன்.† இவற்றல், பாண்டிநாடு அந்நாளில் எத்தகைய துன்பநிலையில் இருந்தது என்பதை எளிதில் உணரலாம்.

பாண்டிமன்னர் நிலைமையினையும் உள்நாட்டில் நேர்ந்த குழப்பங்களையும் நன்குணர்ந்த சேரமன்னனுகிய இரவிவர்மன் குலசேகரன் என்பவன் பாண்டியராச்சியத்தின்மீது படையெடுத்துச் சென்று சிலபகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டனன். இவனது கல்

* See South India and her Mahammadan Invaders by Dr. S. Krishnasamy Aiyangar.

† The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, Page 207.

வெட்டுக்கள் சோழமண்டலத்திலும் தொண்டைமண்டலத்திலும் சில ஊர்களிற் காணப்படுகின்றன.* அக்கல்வெட்டுக்களில் இவன் வீரபாண்டியனையும் சுந்தரபாண்டியனையும் வென்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. இந்நிலையில், பாண்டியராச்சியத்தில் நிலவிய குறுநிலமன்னர்களும் திறைமறுத்துத் தனியரசுபுரியத் தொடங்கினர்கள். அங்ஙனம் சுயேச்சையாகத் தம் நாட்டை ஆட்சிபுரியத் தொடங்கியவர்கள் தொண்டைமண்டலத்துப் படைவீட்டு இராச்சியத்துச் சம்புவராயர்களும்† பாண்டிநாட்டிலிருந்த வாணாதிராயர்களும் ஆவர். ஆகவே, குலசேகரபாண்டியனாட்சியில் மிகச்சிறந்த நிலையிலிருந்த பாண்டிராச்சியம் அவன் புதல்வர்கள் ஆளுகையிற் பலவகையிலும் தாழ்வுற்றமை உணரற்பாலது.

வீரபாண்டியன் தனது ஆட்சியின் பிற்பகுதியில் தலைநகராகிய மதுரையை மகமதியத்தலைவனான ஜலாலுடீன் அசன்ஷா என்பவனிடம் இழந்துவிட்டு வேறிடஞ்சென்றான். இத்தலைவன் டில்லிமாநகரிலிருந்த மகமது துக்ளக் என்னும் அரசனால் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டவன். இவன் பாண்டிய அரசனைவென்று அவனது நாட்டையும் கவர்ந்துகொண்டதோடு டில்லிமன்னன் பிரதிநிதியாக மதுரையிலிருந்து அரசாளவும் தொடங்கினான். சிலநாட்களுக்குப்பின்னர், இவன் டில்லிவேந்தனுடையதொடர்பை முழுவதும் ஒழித்துவிட்டு மதுரையில் அரசு செலுத்திவந்தான். பாண்டிநாட்டில் மகமதியரது ஆளுகை கி. பி. 1330-ஆம் ஆண்டிற் கணிக்கதாகத் தொடங்கி, கி. பி. 1377 வரையில் நடைபெற்றது. ஜலாலுடீனுக்குப் பிறகு அங்கு அரசாண்ட மகமதியத் தலைவர்கள் அல்லாவுடீன் உடயூஜி, குட்டப்உடீன், கியாத்துடீன், நாசுருடீன், அடில்ஷா, பக்ருடீன், முபாரக்ஷா, அல்லாவுடீன் சிக்கந்தர்ஷா என்போர்.‡ இவர்களுள் சிலர், தம்பேரால் பொன்நாணயங்களும் வெளியிட்டுள்ளனர். இவர்கள் ஆளுகையைக் குறிக்கும் இரண்டு கல்வெட்டுக்கள் புதுக்கோட்டை இராச்சியத்திலுள்ள இராங்கியம், பனையூர் என்ற ஊர்களில்

---

* Annual Report on South Indian Epigraphy for 1926—27, Part II, para 68.

† தமிழ்ப் பொழிலிரண்டாந்துணரில் (பக்கம் 142-150) யானெழுதியுள்ள 'சம்புவராயமன்னர்' என்ற கட்டுரையால் இவர்கள் வரலாற்றை அறியலாம்.

‡ See South India and her Mahammadan Invaders by Dr. S Krishnaswamy Aiyangar.

உள்ளன. (Inscriptions of the Pudukkottai State Nos. 669 & 670.) இவர்கள் ஆண்டகாலங்களில் உள்நாட்டிற் கலகங்கள் மிகுந்திருந்தமையின் மக்களெல்லோரும் அல்லல் வாழ்க்கையுடையோராயிருந்தனர். (Do. Ins. 454 & 667.) அப்போது பல திருக்கோயில்கள் கொள்ளையிடப்பெற்று நாள் வழிபாடும் ஆண்டு விழாவும் இன்றிப் பலஆண்டுகள் மூடப்பட்டிருந்தன என்று சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன.* சமயக்கொள்கைபற்றிப் பொதுமக்கள் பல்வகைத் துன்பங்களுக்கும் ஆளாயினர் என்பது மகமதிய சரித்திர ஆசிரியனாகிய இபின் பாதூதா (Ibn Batuta) வின் குறிப்புக்களால் தெரிகிறது. (See South India and her Muhammadan Invaders.)

மகமதியரது ஆட்சிக்காலத்தில் பாண்டிநாட்டில் சில பாண்டிய அரசர்களும் இருந்தனர். அவர்கள், மாறவர்மன் குலசேகரபாண்டியன் (1314-1346.) சடையவர்மன் பராக்கிரமபாண்டியன் (1315-1347) மாறவர்மன் வீரபாண்டியன் (1334—1380.) மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் (1335—1352) என்போர். (The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, pages 246 & 247) அவர்கள் கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிற் பல இடங்களிற் காணப்படுகின்றன. ஆனால், அந்நாட்டில் எவ்வெவ்வூர்களிலிருந்து எவ்வெப்பகுதிகளை அவர்கள் ஆண்டுவந்தனர் என்பது நன்கு புலப்படவில்லை. அவர்கள் மகமதியராளுகைக்கு அடங்கியிருந்தனர் என்பது ஒருதலை. எனினும், தம் நாட்டில் நடைபெற்றுவந்த அபலாரது கொடிய ஆட்சியையும் அதனால் மக்கள் எய்திய எல்லையற்ற துன்பங்களையும் ஒழித்தற்கு அன்னோர் முயன்றும் இருக்கலாம். அம்முயற்சி பயன்படவில்லைபோலும். அத்தகைய முயற்சியில் ஈடுபட்டுழைத்த போசளமன்னனாகிய மூன்றாம் வீரவல்லாளதேவனும் ஊழ்வலியால் வெற்றிபெறாது போர்க்களத்தில் உயிர்துறந்தது அறியத்தக்கது. †

இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற விஜயநகரவேந்தனாகிய குமார கம்பண்ணன் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்கு வந்தான். அவன் படையெடுத்து வந்தது, மதுரைமாநகரில் நிலைபெற்றிருந்த மகமதியராட்சியை ஒழித்து மக்களையும் சமயங்களை

---

* Inscription No. 322 of 1927; Ins. Nos. 80 and 81 of 1927 (Annual Report on South Indian Epigraphy for 1926—27.)

† Mysore Gazetteer Vol. II, Part II, Page 1405.

யும் பாதுகாத்தற்கேயாகும். குமாரகம்பண்ணனது தென்னாட்டுப் படையெழுச்சி கி. பி. 1364-ஆம் ஆண்டிற்கு அணித்தாக நிகழ்ந்த தென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.* இப்படையெழுச்சியைக் குறிக்கும் கல்வெட்டுக்களும் தமிழ்நாட்டிற் சில ஊர்களில் உள்ளன. விஜயநகரவேந்தனது படையெழுச்சியினால் தென்னாட்டில் மகமதியராட்சி ஒருவாறு நிலைகுலைந்தது எனலாம். ஆயினும், அவர்கள் ஆட்சி கி. பி. 1377 வரையில் மிகத்தளர்ச்சியுற்ற நிலையிலாதல் அங்கு நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது அந்நாட்டிற் கிடைத்துள்ள சில மகமதிய நாணயங்களால் வெளியாகின்றது. மகமதியர்களை வென்ற விஜயநகரமன்னன் பாண்டியர்களுள் எவ்வரசனிடத்தில் அந்நாட்டை ஒப்பித்துச் சென்றான் என்பது புலப்படவில்லை. ஆயினும், அவன் பாண்டியர்க்கு உற்றுழி உதவுமாறும் அறநிலையங்களைப் பாதுகாத்துவருமாறும் சில தலைவர்களைப் பாண்டிநாட்டில் ஆங்காங்கு அமர்த்திச் சென்றனன். அத்தலைவர்களும் பாண்டிய ராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டு தாமே அரசாளவேண்டுமென்ற எண்ணத்துடன் காலங்கருதிக்கொண்டிருந்தனர். பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினைந்தாம் நூற்றாண்டிலும் பாண்டிய அரசர்கள் கல்வெட்டுக்கள் மதுரைஜில்லாவிற் காணப்படவில்லை; திருநெல்வேலிஜில்லாவில் மாத்திரம் அவர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆகவே, பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர்கள் தம் தலைநகராகிய மதுரையையும் அதனைச் சூழ்ந்துள்ள நாட்டையும் இழந்து திருநெல்வேலி ஜில்லாவிற்குச் சென்று தங்கியிருந்தனராதல் வேண்டும்.

இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் கி. பி. 1453-ஆம் ஆண்டில் வரையப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டு, 'மகாபலி வாணதரையர் சீர்மையான மதுரைமண்டலம்' என்று கூறுகின்றது. (Travancore Archaeological Series, Vol. I, page 46.) அன்றியும், பாண்டியர் ஆட்சிக்காலங்களில் அன்னோர்க்குத் திறை செலுத்திவந்த குறுநிலமன்னர்களான மாவலிவாணாதிராயர்கள் தம்மை 'மதுராபுரிமகாநாயகன்' எனவும் 'பாண்டிய குலாந்தகன்' எனவும் கி. பி. 1483-ல் சிறப்பித்துக் கூறிக்கொண்டமை புதுக்கோட்டை இராச்சியத்தில் நெக்கோணம் என்ற ஊரிலுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது. (Inscriptions of The Pudukkottai State, No. 672.) இவற்றால் பதினைந்தாம் நூற்றாண்டில் மதுரை

---

* The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, page 244.

யிலிருந்து அரசுசெலுத்தியவர்கள் வாணதிராயர்கள் என்பது நன்கு வெளியாகின்றது. பாண்டியர்கள் மிகத் தளர்ச்சியெய்தியிருந்த நாட்களில் இவ்வாணதிராயர்கள் அவர்களைப் போரில்வென்று அன்னோர் தலைநகராகிய மதுரையைக் கைப்பற்றிக்கொண்டதோடு அதனைச் சூழ்ந்துள்ள நாட்டைத் தாமே சுயேச்சையாக ஆட்சிபுரியவும் தொடங்கியிருத்தல் வேண்டும். இவர்கள் 'பாண்டியகுலாந்தகன்'* என்று தம்மைச் சிறப்பித்துக் கூறிக்கொள்வது ஒன்றே, பாண்டியரிடத்து இன்னோர்கொண்டிருந்த பெரும்பகைமையை நன்குவிளக்கா நிற்கும். அன்றியும், புதுக்கோட்டை நாட்டில் குடுமியான்மலையில் உள்ள இரண்டு கல்வெட்டுக்கள், பாண்டியர்கள் வாணதிராயர்களிடம் தோல்வியுற்று வேற்றிடம் சென்றனர் என்பதை வலியுறுத்துகின்றன.† மதுரைமாநகரினின்றும் நீங்கியபின்னர், அவர்கள் தென்பாண்டி நாட்டை அடைந்து அங்கு அரசுசெலுத்தி வந்தனரென்பது பல கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது. அவர்கள் ஆளுகையும் அங்குப் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிவரையில்நடைபெற்றமை அறிந்துகொள்ளுதற்குரியதாகும்.

ஒன்பதாம் அதிகாரம்.

தென்பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்த பிற்காலப் பாண்டியர்கள்.

கி. பி. பதினான்காம்நூற்றாண்டின் பிற்பகுதிமுதல் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் தென்பாண்டி நாட்டிற் சில பாண்டிய அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். அவர்கள் கல்வெட்டுக்களும்

---

* Inscription of The Pudukkottai State, No. 672.

† மால்விட்ட படைதுரந்து வடுகெறிந்த மகதேசன் வடிவேல் வாங்கக்
கால்விட்ட கதிர்முடிமே லிந்திரனைப் புடைத்ததுமுன் கடல்போய்
[வற்ற
வேல்விட்ட தொருதிறலு முகிலிட்ட தனிவிலங்கும் வெற்பி லேறச்
சேல்விட்ட பெருவலியு மாங்கேவிட் டு (?) நடந்தான் தென்னர்
[கோவே.

(Inscriptions of The Pudukkottai State, No. 653.)

இழைத்த படியிதுவோ வெங்கண வென்றென்
றழைத்த வழுகுர லேயால்—தழைத்தகுடை
மன்னவர்கோன் வாணன் வடிவேலால் தோற்றுடைந்த
தென்னவர்கோன் போன திசை.

(Do. No. 678.)

செப்பேடுகளும் அன்னோர் பெயர்களை உணர்த்துமளவிலுள்ளனவே யன்றி வரலாற்றுண்மைகளை விளக்கக்கூடியனவாக இல்லை. அவர்கள் தலைநகர் யாது என்பதும் நன்கு தெரியவில்லை. ஆயினும், கொற்கை, தென்காசி, கரிவலம்வந்தநல்லூர் ஆகிய ஊர்கள் அவர்கள் தலைநகரங்களாக இருந்திருத்தல்வேண்டும் என்பது உய்த்துணரப் படுகின்றது.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்பாண்டி நாட்டில் அரசுசெலுத்திய பாண்டியர்களுள், பராக்கிரமபாண்டியன் என்ற பெயருடையார் மூவர் இருந்தனர்.* அம்மூவருள் கி. பி. 1387ல் திருக்குற்றாலத்தில் திருப்பணிபுரிந்தவன் ஒருவன்; கி.பி. 1384 முதல் 1415 வரையில் அரசாண்டவன் மற்றொருவன்; கி. பி. 1401 முதல் 1434 வரையில் ஆட்சிபுரிந்தவன் மற்றையோன். அன்றியும், அக்காலப்பகுதியில் சடையவர்மன் குலசேகரபாண்டியன், சடையவர்மன் விக்கிரம பாண்டியன் என்ற வேறிரண்டு மன்னரும் இருந்தமை அறியத்தக்கது. இவர்களுள், குலசேகரபாண்டியன் கி. பி. 1395-ல் பட்டம் பெற்றவன். இவன் கல்வெட்டொன்று கரிவலம்வந்தநல்லூரில் உள்ளது. அஃது இவ்வேந்தனது ஆணைத்திருமுகமாகும்.† விக்கிரம பாண்டியன் கி. பி. 1401 முதல் 1422 வரையில் அரசுசெலுத்தியவன். இவன் கல்வெட்டுக்கள் திருக்குற்றாலத்திலும் திருப்புத்தூரிலும் உள்ளன.‡ இவர்கள் எல்லாரும் தென்பாண்டிநாட்டில் எவ்வெவ்விடங்களிலிருந்து எவ்வெப்பகுதிகளை ஆட்சிபுரிந்தனர் என்பது புலப்படவில்லை.

சடையவர்மன் பராக்கிரமபாண்டியன் :—பிற்காலப் பாண்டியர்களுள் இவ்வேந்தன் மிகுந்தபெருமை வாய்ந்தவனாவன். இவன் கி.பி. 1422 முதல் 1463 வரையில் அரசாண்டவன்; செந்தமிழ்ப்புலமையும் வடமொழிப் பயிற்சியும் உடையவன். இவனைப் பொன்னின் பெருமாள் § எனவும் மானகவசன் || எனவும் அந்நாளில் வழங்கியுள்ளனர். தென்காசிக்கோயிலிலுள்ள 'பூமிசைவனிதை நாவினிற்

---

* The Pandyan Kingdom p p. 246 and 248.
† Travancore Archaeological Series Vol. I. Page 45.
‡ The Pandyan Kingdom, page 248.
§ Travancore Archaeological Series, Vol. I. p. 97.
|| Do.

பொலிய' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி * இவனது போர்ச் செயல்களையும் திருப்பணிகளையும் குணச்சிறப்பையும் நன்கு விளக்கு கின்றது.

இம்மன்னன், சங்கரநயினர்கோயில், திருக்குற்றாலம், முதலைக் குளம், வீரகேரளம்புதூர் முதலான ஊர்களில் தன் பகைஞரைப் போரில்வென்று புகழெய்தினன் என்று இவன் மெய்க்கீர்த்தி கூறு கின்றது. இவன் திருக்குற்றாலப்போரில் சேரனைவென்றான் என்பது, தளவாய் அக்கிரகாரச் செப்பேடுகளால் வெளியாகின்றது. †

இவன் விந்தனூர் ‡ முதலான ஐந்து ஊர்களில் அகரங்கள் அமைத்து அந்தணர்களுக்கு அளித்தமையும், திருக்குற்றாலம் திருப் புடைமருதூர் இவற்றிலுள்ள சிவாலயங்களில் மண்டபங்கள் அமைத் தமையும், திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அர்த்தயாமவழிபாட்டிற்கு நிபந்தங்கள் விட்டமையும், இவன் மெய்க் கீர்த்தியால் அறியப்படுஞ் செய்திகளாம்.

இற்றைநாளிலும் காண்போர் கண்களைக்கவரும் சிற்பநுட்ப மும் வனப்பும் வாய்ந்த தென்காசிப் பெருங்கோயிலை இவ்வேந்தன் எடுப்பித்தது இவனது சிவபத்தியின் மாண்பினை இனிது புலப் படுத்தாநிற்கும். இவ்வாலயத்திற்கு நாள்வழிபாட்டிற்கும் ஆண்டு விழாவிற்கும் தேவதான இறையிலியாகப் பல ஊர்கள் இவ்வரசனால் அளிக்கப்பெற்றுள்ளன. § சிவபெருமான், ஒருநாள் இவ்வரசன் கனவில்தோன்றி வடகாசியிலுள்ள தம் திருக்கோயில் அழிவுற்ற நிலையிலிருத்தல்பற்றிச் சித்திராநதியின் வடகரையில் தென்காசியும் அதில் ஓர் ஆலயமும் அமைக்குமாறு கூறியருளியதே, இதனை இவன் கட்டுவித்தமைக்குக் காரணமாகும். இச்செய்தி, தென்காசிக் கோயிற் கோபுரத்தின் முன்னர் நிற்கும் ஒரு கற்றூணில் வரையப் பட்டுள்ளது. ‖ இக்கோயிலின் திருப்பணி முடிவுபெறுதற்குப்

---

* Travancore Archaelogical Series Vol. I. p. 91.

† Do. pp. 126 and 133.

‡ செங்கோட்டைத் தாலூகாவிலுள்ள இவ்விந்தனூர்க்குப் பராக்கிரம பாண்டியச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் முற்காலத்தில் இருந்தமை உணரத்தக்கது.

§ Travancore Archaeological Series, Vol. I, pp. 91, 92, 93 and 101.

‖ Do. Do. pp. 99 and 100.

பதினேழாண்டுகள் ஆயின என்பது அக் கல்வெட்டால் தெரிகிறது. ஆனால் இவன் தொடங்கிய ஒன்பதுநிலைக் கோபுரத்திருப்பணி மாத்திரம் இவனாட்சியில் முடிவெய்தவில்லை. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்பால் இவன் கொண்டிருந்த பத்தி அளவிட்டு உரைக்கத் தக்கதன்று. எத்தகைய குறைகளுமின்றி இக்கோயிலைப் பாதுகாத்துவருமாறு சிவனடியார்களையும் தன் வழித்தோன்றல்களையும் இம்மன்னன் வேண்டிக்கொண்டிருப்பது குறிப்பிடற்பாலதாகும். அவ்வேண்டுகோளும் சில செந்தமிழ்ப் பாடல்களாக உள்ளது. கன்னெஞ்சமுடையாரையும் உருக்கும் இயல்புடையனவும், எங்கிலையினரையும் பிணிக்குந்தன்மை வாய்ந்தனவும் ஆகிய அப்பாடல்கள் இவ்வரசன் இயற்றியனவேயாகும். அவற்றைத் தென்காசிக்கோயிற் கோபுரத்தில் இன்றும் காணலாம். * இப்பெருங்கோயிலில் பிற்காலப் பாண்டியர்கள் எல்லோருக்கும் முடிசூட்டுவிழாநடைபெற்றுவந்தமை உணரற்பாலதாகும்.

இவன் தன் ஆட்சியில் விசுவநாதப்பேரேரி என்ற பெயருடைய ஏரி ஒன்று வெட்டுவித்திருப்பது குடிகளது நலத்தின்பொருட்டு இவன் புரிந்த அரிய செயல்களுள் ஒன்றாகும்.† சிவபத்தியிலும்

---

* 1. 'மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்க முன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்றென் காசியை யென்று [மண்மேல்
நினைத்தாத ரஞ்செய்து தங்காவல் பூண்ட நிருபர்பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே.

2. ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே.

3. சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே.

4. சாத்திரம் பார்த்திங் கியான்கண்ட பூசைகள் தாம்நடத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென் றும்புரக்க
பார்த்திபன் கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு மடைக்கலங் கூறினனே.

Travancore Archaeologial Series, Vol. I, pp 96&97

† 'நாம் நவமாகக்கண்ட விசுவநாதப்பேரேரிக்குப் பெருநான்கெல்லையாவது'—Travancore Archaeological Series Vol. I. page 51.

செங்கோன் முறையினும் சிறந்துவிளங்கிய இவ்வேந்தன் கி. பி. 1463-ல் விண்ணுலகடைந்தான்.*

சடையவர்மன் குலசேகரபாண்டியன்:—பராக்கிரமபாண்டியன் தம்பியாகிய இவ்வரசன் கி. பி. 1429 முதல் 1473 வரையில் ஆட்சி புரிந்தவன். எனவே, இவன் தன் தமையனுடன் சேர்ந்து தென் பாண்டிநாட்டை அரசாண்டவனாதல் வேண்டும். பராக்கிரமபாண்டியன் காலத்தில் தொடங்கப்பெற்று முடிவுபெறாமலிருந்த ஒன்பது நிலைக் கோபுரத்திருப்பணியை இவன் முடித்தமை அறிதற்குரியதாகும்.†

அழகன்பெருமாள் பராக்கிரமபாண்டியன்:—இவன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் புதல்வன்; கி. பி. 1473 முதல் 1506 வரையில் அரசுசெலுத்தியவன். இவன் காலத்தில் பராக்கிரமபாண்டியனான குலசேகரதேவன் என்ற வேறொரு மன்னன் இருந்தனன் என்பது சில கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது.‡ அவன் கல்வெட்டுக்கள் கி. பி. 1479 முதல் 1499 வரையில் உள்ளன. அவன் யாவன் என்பது தெரியவில்லை.

இனி, அபிராமபராக்கிரமபாண்டியன், ஆகவராமன்என்ற உடன்பிறப்பினர் இருவர் இருந்தமை, புதுக்கோட்டைச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது.§ இவர்களைப்பற்றிய செய்திகள் கிடைத்தில.

சடையவர்மன் சீவல்லபபாண்டியன்:—இவன் ஆகவராமன் புதல்வன்; கி. பி. 1534 முதல் 1543 வரையில் அரசாண்டவன்.

---

* இவ் வேந்தன் வானுலகெய்தியஞான்று ஒரு புலவர் பாடிய பாடல் தென்காசிக் கோயிலிற் பொறிக்கப் பெற்றுள்ளது. அஃது அடியில்வருமாறு:

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத் திலோசிவ லோகத் திலோவிசுவ நாதனிரு
பாதத் திலோசென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.

Travancore Archaeological Series, Vol. I, page 97.

† Travancore Archaeological Series Vol. I, page 103.

‡ Do. 60.

§ Do. 83.

இவனுக்கு 'இறந்தகாலமெடுத்தவன்'* 'பாண்டியராச்சிய தாபனுசாரியன்' † என்ற பட்டங்களுமுண்டு. இவன்காலத்தில் திருவாங்கூர் இராச்சியத்திலிருந்த உதயமார்த்தாண்டவர்மன் என்ற சேரமன்னன் ஒருவன், தென்பாண்டிநாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். அச்சேரன் கல்வெட்டுக்கள் பிரமதேசம், சேரமாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களில் உள்ளன. ‡ ஆகவே, இப்பகுதி அவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது திண்ணம். தன் நாட்டை இழந்த சீவல்லபபாண்டியன், விசயநகரவேந்தனுகிய அச்சுததேவராயனிடம் முறையிடவே, அவனும் பெரும் படையோடு தென்னுட்டிற்குவந்து உதயமார்த்தாண்டவர்மனைப் போரில்வென்று அவன் கைப்பற்றியிருந்த தென்பாண்டிநாட்டைப் பிடுங்கிப் பாண்டியற்குக் கொடுத்தனன். § விசயநகரவேந்தன் இங்ஙனம் விரைந்து செய்தமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது, சேரமன்னன் சில ஆண்டுகள் அவனுக்குக் கப்பஞ்செலுத்தாதிருந்தமையேயாம்.

அச்சுததேவராயன் இத்தகைய அரிய உதவிபுரிந்தமைபற்றிச் சீவல்லபன் தன் மகளை அவனுக்கு மணஞ்செய்துகொடுத்துமகிழ்ச்சியுற்றான். || இந்நிகழ்ச்சியினுல் பாண்டியர்குலத்திற்குப் பழையபெருமையும் சிறப்பும் மீண்டும் உண்டாகுமாறு தான் செய்துவிட்டதாக எண்ணி 'இறந்தகாலமெடுத்தவன்' 'பாண்டியராச்சியதாபனுசாரியன்' என்ற பட்டங்களை இவன் புனைந்துகொண்டனன்போலும்.

சடையவர்மன் பராக்கிரம குலசேகரபாண்டியன்:—இவன் அபிராமபராக்கிரமபாண்டியனுடைய முதற்புதல்வன். இவனுடைய கல்வெட்டுக்கள் கி. பி. 1543 முதல் 1552 வரையில் உள்ளன. இவனைப்பற்றி யாதும் தெரியவில்லை.

நெல்வேலிமாறன்:—இவன் அபிராமபராக்கிரமபாண்டியனுடைய இரண்டாவது புதல்வன்; கி. பி. 1552 முதல் 1564 வரையில் ஆட்சிபுரிந்தவன். இவனுக்கு வீரபாண்டியன், குலசேகரபாண்டி

---

* Travancore Archaeological Series, Vol. I, page 47.
† Do. Do. 54.
‡ Do. Do. 55.
§ Do. Do.
|| Do. Do. 56.

யன், பொன்னின்பாண்டியன், தர்மப்பெருமாள், அழகன்பெருமாள் என்ற வேறு பெயர்களுமுண்டு. இவன் புலவர்கள் பாடிய வீர வெண்பாமாலைகொண்டவன் என்று தென்காசியிலுள்ள ஒரு கல் வெட்டு உணர்த்துகின்றது.*

சடையவர்மன் அதிவீரராமபாண்டியன்:—இவன் நெல்வேலிமாறன் முதல்மகன்; கி. பி. 1564 முதல் 1604 வரையில் அரசுசெலுத்தியவன். இவனை அழகன் சீவலவேள் எனவும் வழங்குவர். தன் தந்தையாகிய நெல்வேலிமாறனை நினைவுகூர்தற்பொருட்டுத் தென்காசியில் குலசேகரமுடையாராலயம் ஒன்றை இவன் எடுப்பித்திருப்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.† இதன் அண்மையில் இவன் எடுப்பித்த விண்ணகரம் ஒன்றும் உளது. இவன் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்துவிளங்கியவன் என்பது இவன் பாடியுள்ள சில தமிழ்நூல்களாற் புலப்படுகின்றது.

வடமொழியில் ஹர்ஷன் இயற்றியுள்ள நைஷதம் என்ற நூலை இவன் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளான். அது நைடதம் என்று வழங்கப்படுகிறது. அந்நூலை மொழிபெயர்த்தற்கு இவனுக்கு உதவிபுரிந்தவர் நைஷதம் இராமகிருஷ்ணர் என்ற வடமொழிப்புலவர் ஆவர்.‡ இவ்வேந்தன் பாடியுள்ள பிறநூல்கள் கூர்மபுராணம் வாயுசங்கிதை காசிகாண்டம் இலிங்கபுராணம் நறுந்தொகை என்பன. இவன் சிவபெருமானிடத்தில்மிகுந்த ஈடுபாடுடையவனாக ஒழுகிவந்தனன் என்பது இவன் இயற்றியுள்ள சைவபுராணங்களால் நன்குவிளங்கும்.

வரதுங்கராமபாண்டியன்:—இவன் பராக்கிரம குலசேகரபாண்டியனுடைய இரண்டாவது மகன்; கி. பி. 1588-ல் முடிசூட்டப்பெற்றவன். அபிராமசுந்தரேசுவரன் எனவும் வீரபாண்டியன் எனவும் செப்பேடுகளில் இவன் குறிக்கப்பெற்றிருத்தல் அறியத்தக்கது ‖ அதிவீரராமபாண்டியனுடைய்சிக் காலத்தில் தென்பாண்டிநாட்டிற் சில பகுதிகளைக் கரிவலம்வந்தநல்லூரிலிருந்து இவன் அரசாண்டவனாதல் வேண்டும் என்பது சில குறிப்புக்களால் அறியப்படுகின்றது. §

---

* Travancore Archaeological Series, Vol. I, Ins. No. VII

†	Do.	Do. page 50.
‡	Do.	Do. 85.
‖	Do.	Do. 115 & 133.
§	Do.	Do. 125

இவன் வில்லவனை வென்றானென்றும் வல்லமெறிந்தானென்றும் தென்காசியிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.* இவனால் வென்றடக்கப் பெற்ற சேரமன்னன் யாவன் என்பதும் வல்லத்தில் இவன் யாருடன் போர் புரிந்தான் என்பதும் புலப்படவில்லை.

அதிவீரராமபாண்டியனைப் போல் இவ்வேந்தனும் தமிழ்மொழியில் பெரும்புலமை படைத்தவன் என்பது இவன் இயற்றியுள்ள தமிழ்நூல்களால் நன்கு துணியப்படும். அவை, பிரமோத்தரகாண்டம், கருவைக் கலித்துறையந்தாதி, கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி கருவை வெண்பா அந்தாதி என்பன.† இவனும் சிவபெருமானிடத்து ஒப்பற்ற பத்தியுடையவனாயிருந்தனன் என்பது இவனியற்றிய நூல்களால் இனிது புலனாகும்.

அதிவீரராமபாண்டியற்குச் சுவாமிதேவரும் வரதுங்கராமபாண்டியற்கு வேம்பற்றூர் ஈசானமுனிவரும் ஆசிரியர்களாக இருந்திருத்தல்வேண்டும் என்பது இவர்கள் தம் நூல்களிற் கூறியுள்ள குருவணக்கங்களாற் பெறப்படுகின்றது.

வரகுணராம குலசேகரபாண்டியன்:—கி. பி. 1613-ல் முடிசூட்டப் பெற்ற இவ்வேந்தன் முன்னவர்களுக்கு யாது முறையுடையான் என்பது தெரியவில்லை. இவன் வேதவிதிப்படி வேள்வி புரிந்தவன். இதுபற்றியே இவன் குலசேகரசோமாசியார் என்று வழங்கப்பெற்றமை குறித்தற்குரியதாகும்.‡ கி. பி. 1748-ல் இருந்த மற்றொரு பாண்டியன், இவனைப்போலவே வரகுணராமபாண்டிய குலசேகர

---

* பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்குங்
கொற்ற முயர்க்குமறங் கூறுமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

திருநெல்வேலிஜில்லாவிலுள்ள தென்காசியில் வாழ்ந்த கலியன் கவிராயர் என்பவர் வரதுங்கராமபாண்டியன் முடிசூட்டு விழாவில் நாண்மங்கலமும் குடைமங்கலமும் வாண்மங்கலமும் பாடி அரசனைப் பாராட்டியுள்ளனர். அவற்றுள் இப்பாடல் வாண்மங்கலமாகும். ('கல்வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப்புலவர்கள்' என்ற எனது கட்டுரையில் இவற்றைக் காணலாம்:— செந்தமிழ்த் தொகுதி 29, பக்கங்கள் 291-296.)

† இவ்வந்தாதிகள் அதிவீரராமபாண்டியனால் பாடப்பெற்றவை என்பர். அது தவறாகும்.

‡ Travancore Archaeological Series, Vol. I. page 148.

தேவதீட்சிதர் என்று தன்னைச் சிறப்பித்துக்கொண்டமை ஈண்டு உணரற்பாலது. ஆகவே, பிற்காலப் பாண்டியர்களுள் சிலர் சோமாஜியார், தீட்சிதர் என்றபட்டங்கள் புனைந்துகொண்டு அவற்றால் தம்மைப் பெருமைபடுத்திக்கொள்ள விரும்பினர் என்பது வெளியாதல் காண்க.

இக்காலப்பகுதியில் வாழ்ந்த பாண்டியர்களுள் பெரும்பாலோர் விசயநகரவேந்தர்கட்குக் கப்பஞ்செலுத்திவந்த குறுநிலமன்னரேயாவர். இங்ஙனம் குறுநிலமன்னராயிருந்த பாண்டியர் இறுதியில் ஜமீன்தார் நிலையை எய்தித் தென்பாண்டிநாட்டில் ஓர் ஊரில் இருந்து வருவாராயினர்.

நம் தமிழகத்தின் தென்பகுதி தம்பெயரால் என்றும் நின்று நிலவுமாறு சரித்திரகாலத்திற்கு முன்தொடங்கிப் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் அங்கு ஆட்சிபுரிந்துவந்த தமிழ்வேந்தர்களான பாண்டியர்கள் தம்நாட்டை இழந்து சிறுமையுற்றுச் சீர்குலைந்தமை காலவேறுபாட்டினால் நிகழ்ந்த மாறுதலேயாம். ஆயினும், அவர்களுடைய மாரியன்ன வரையாவண்மையால் வெளிவந்துள்ள எடுப்பும் இணையுமற்ற தமிழ்நூல்கள் நம்மனோர்பண்டைப் பெருமையினை எந்நாட்டினர்க்கும் அறிவுறுத்தும் அரும்பெரு நிதியமாகவும் அறிவுச்சுடர்கொளுத்தி நமது அகவிருள் போக்கும் செஞ்ஞாயிறாகவும் அமைந்து அன்னோரை நினைவு கூர்தற்கு ஏற்ற கருவிகளாக நிலைபெற்றிருப்பது மகிழ்தற்குரியதாகும்.